
செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686424-1-6

(108)



இரசிகமணி டிகேசி

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/52.%E0%AE%87%E0%AE%B0%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%95%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%20%E0%AE%9F%E0%AE%BF.%E0%AE%95%E0%AF%87.%E0%AE%9A%E0%AE%BF.

செந்தமிழ்சிற்பிகள்

இரசிகமணி டி. கே. சி. (1881 - 1954)



அறிமுகம்

டி. கே. சிதம்பரநாத முதலியார் (T. K. Chidambaranatha Mudaliar, செப்டம்பர் 11, 1881 - பெப்ரவரி 16, 1954) ரசிகமணி டி.கே.சி. என அறியப்படும் இவர் ஒரு வழக்கறிஞர், எழுத்தாளர் மற்றும் தமிழ் இலக்கிய திறனாய்வு முன்னோடி ஆவார்.

வாழ்க்கை

திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை தீத்தாரப்ப முதலியார் - மீனாம்பாள் தம்பதியினருக்கு மகனாக பிறந்த இவர் தென்காசியில் ஆரம்ப கல்வியும் திருச்சிராப்பள்ளி உயர்நிலைப் பள்ளியில் உயர்

கல்வியும் பயின்றார். சென்னை கிறித்துவக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றார். இவரது தாய் மற்றும் இவரது மனைவி பிச்சம்மாளின் பிறந்த ஊரான திருவில்லிபுத்தூர் வடக்கு ரத வீதியில் உள்ள இல்லத்தில் சிறிது காலமும், குற்றாலத்திலும் வாழ்ந்து இருந்தார்.1930 முதல் 1935 வரை சென்னை மாகாண இந்து அறநிலையத்துறை பாதுகாப்பு ஆணையராக பணியாற்றினார்.

இலக்கியப் பணி

திருநெல்வேலியில் வண்ணார்பேட்டை சாலைத்தெருவில் உள்ள இவரது வீட்டின் நடு முற்றமாக இருந்த (தொட்டிக்கட்டு) வட்ட வடிவமான அமைப்பில் இவரது நண்பர்கள் மாலை வேளையிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் கூடுவார்கள். இந்தக் கூட்டத்திற்குத் தான் வட்டத்தொட்டி என்ற பெயர் ஏற்பட்டது. இவரின் வட்டத்தொட்டி இலக்கிய அமைப்பில் மீ. ப. சோமு, பி. ஸ்ரீநிவாச்சாரி, கல்கி, ரா. பி. சேதுப்பிள்ளை, இராசகோபாலாச்சாரி, அ. சீனிவாச ராகவன், தொ. மு. பாஸ்கர தொண்டைமான், ச. வையாபுரிப்பிள்ளை, வெ. ப. சுப்பிரமணிய முதலியார் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்

அரசியல்

1927 ல் சென்னை மாகாணத்தின் சட்டமன்ற மேலவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாநில முதல்வராக இருந்தபோது தமிழக அரசுக்கு ஏற்ற முத்திரைச் சின்னமாக திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் கோபுரம் பரிந்துரை செய்தார்.

தமிழ் ஆர்வலர்களால் 'டி.கே.சி.' என்று சுருக்கமாக அழைக்கப் பெறும் ஆளுமையாளர் டி.கே.சிதம்பரநாத முதலியார் (1881--1954). பி.எல். பட்டம் பெற்ற வழக்கறிஞர், சட்ட மன்ற மேலவை உறுப்பினர், இந்து சமய பரிபாலனக் குழுவின் ஆணையர், 'வட்டத்தொட்டி' என்னும் இலக்கிய அமைப்பின் நிறுவனர் 'இதய ஒலி', 'கம்பர் யார்?' முதலான நூல்களின் ஆசிரியர் 'கம்பர் தரும் ராமாயணம்', 'முத்தொள்ளாயிரம்' ஆகிய நூல்களின் பதிப்பாசிரியர் என பல்வேறு

சிறப்புகள்- டி.கே.சி.க்கு உண்டு. எனினும் டி.கே.சி. என்றதுமே நம் நினைவுக்கு முதலில் வந்து நிற்பது அவரது ரசனை உள்ளமும் இயல்பான நகைச்சுவை உணர்வும் தான்!ஒரு முறை டில்லிக்கு டி.கே.சி. சென்றிருந்த போது, பிரதமர் நேரு வீட்டிற்கு விருந்தினராக வரும்படி அழைத்தார். நேருவின் வீட்டிற்கு ஓட்ஸ் சாதம் பொங்கிக் கொண்டு போனார் டி.கே.சி., அதைப் பார்த்த நேரு,“ஓ! நீங்கள் மிகவும் ஆசாரம் போலிருக்கிறதே?” என்று கேட்டார்.“இல்லை, நான் ஆசாரமே இல்லை. எனக்கு எல்லா வகையான ஆகாரங்களும் சாப்பிட வேண்டும் என்றுதான் ஆசை, ஆனால் என் வயிறு இருக்கிறதே, அது தான் ஆசாரம்!” என்றாராம். தம்முடைய சக்கரை நோயைப் பற்றி டி.கே.சி. இங்ஙனம் நகைச்சுவையுடன் வெளியிட்ட பாங்கினை நேருவும் மற்ற விருந்தினர்களும் ரசித்து அனுபவித்துச் சிரித்தார்களாம். வட்டத்தொட்டி ரசிகமணியின் ரசிக உள்ளத்திற்குக் கட்டியம் கூறும் சுவையான நிகழ்ச்சி: ரசிகமணியின் வீட்டில் விருந்தில் பாயசம் பரிமாறப்பட்டது. ரசிகமணி யின் அருகில் அமர்ந்து உணவருந்திய நண்பர் ஒருவர் பாயசத்தை இலை யில் விடாமல் ஒரு டம்ளரில் ஊற்றித் தரும் படி கேட்டார். உடனே, ரசிகமணி,“நீங்கள் டம்ளரில் விட்டுச் சிரமப்பட வேண்டாம். புனல் இருக்கிறது. கொண்டு வரச் சொல்லுகிறேன். அதை வாயில் வைத்துக் கொண்டு பாயசத்தை ஊற்றினால் சொட்டுக் கூட நாக்கில் விழாமல் நேரே உள்ளே போய் விடும்” என்று கூறினார்.பாயசம் என்பது கையில் எடுத்துச் சுவைத்துச் சாப்பிட வேண்டிய ஒன்று. டி.கே.சி.யின் பார்வையில் பாயசத்தை எப்படி ரசித்துச் சாப்பிட வேண்டுமோ - அனுபவித்துச் சாப்பிட வேண்டுமோ - அது போலத் தான் கவிதையையும் ரசித்து, அனுபவித்து, பாடி இன்புற வேண்டும். டி.கே.சி. மேற்கொண்ட திறனாய்வு முறைக்குப் பெயரே, 'ரசனை முறைத் திறனாய்வு' என்பது தான்! இத்தகைய ரசனை முறை உரையாடல்களை டி.கே.சி. தம் நண்பர்கள் குழாத்தோடு நிகழ்த்திய இடத்திற்கு 'வட்டத்தொட்டி' என்று பெயர். பதிலளிக்கும் திறமை எதிர்த்துச் சுடச்சுடப் பதிலளிக்கும் கலையிலும் வல்லமை படைத்தவரா க விளங்கினார் ரசிகமணி. இதனை மெய்ப்பிக்கும் உண்மை நிகழ்ச்சி: கல்லூரி விழா ஒன்றிற்கு டி.கே.சி.யை அழைத்திருந்தார்கள். கூட்டத்தில்

பக்கத்தில் ஒரு ஸ்காட்லாண்ட் பாதிரியார் உட்கார்ந்திருந்தார். அவரிடம் டி.கே.சி.யை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். பாதிரியாரோ இந்தியர்களைப் பற்றி அவ்வளவு நல்ல எண்ணம் கொண்டவர் அல்லர். அவரிடம் பல பொருள்களைப் பற்றி டி.கே.சி. பேசிக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில்,"ஸ்காட்லாண்ட் தேசத்தவர்களாகிய எங்களுக்கு மரங்கள் என்றால் நிரம்பப் பிரியம். இந்தியர்களாகிய உங்களுக்கு எப்படியோ?" என்று கேட்டார் பாதிரியார். டி.கே.சி. உடனடியாகப் பாதிரியாரிடம் சொன்ன பதில் இதுதான்:"மரங்களிடத்தில் எங்களுக்குப் பிரியம் கிடையாது, பக்தியே செலுத்துகிறோம்" இதற்கு மேலும் ஒரு படி சென்று,"எங்கள் தமிழ்நாட்டிலே ஒவ்வொரு கோயிலும் ஒரு மரத்தைச் சுற்றியே எழுந்திருக்கிறது. அதனையே நாங்கள் தல விருட்சம் என்கிறோம்" என்று விளக்கம் கூறியதைக் கேட்ட ஸ்காட்லாண்ட் பாதிரியார் அரண்டே போனார். நகைச்சுவை உணர்வு டி.கே.சி. தம் கண்டனத்தைக் கூட நகைச்சுவையோடு தான் வெளிப்படுத்துவார். அதை எல்லோராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. ஒருமுறை டி.கே.சி. திடீரென்று அருகில் இருந்தவரைப் பார்த்து,"மதுரை எங்கிருக்கிறது தெரியுமா?" என்று கேட்டார்.நண்பர் புரியாமல் விழித்தார் அப்பொழுது டி.கே.சி.யே கேள்விக்கான பதிலைச் சொன்னார் "மதுரை லண்டனில் இருக்கிறது!" என்று ஓங்கிய குரலில் சொன்னார் சூழ்ந்திருந்த அனைவரும் எதுவும் புரியாமல் தவித்துக் கொண்டிருந்த போது, டி.கே.சி.யே அந்த நகைச்சுவைப் புதிரைத் தமக்கே உரிய பாணியில் அவிழ்த்தார்"கொஞ்ச நாளைக்கு முன்பாக, மதுரையில் நம்முடைய தமிழ்ப் பெரும் புலவர்கள் ஒன்று கூடினார்கள். கம்பரைப் பற்றியும், கம்ப ராமாயணக் கவிதைகளைப் பற்றியும் பேசினார்கள்..." இப்படிச் சொல்லிச் சிறிது இடைவெளி விட்டு,"அங்குப் பேசியவர்கள் அனைவரும் இங்கிலீஷில் பேசினார்கள்" என்று முடித்தார்.டி.கே.சி.யின் நண்பர் ஒருவரின் மகள், மேற்படிப்புக்கு அமெரிக்கா புறப்படுவதற்கு முன்னால் , டி.கே.சி.,யிடம் ஆசி பெற வந்தாள். டி.கே.சி. அவளை இப்படிச் சொல்லி வாழ்த்தினார் "அமெரிக்கா போவது பற்றி ரொம்ப சந்தோஷம். அங்கே உள்ளவற்றை எல்லாம் 'பார்த்து' விட்டு வா;'படித்து'க் கொண்டு வந்து விடாதே!"

கடித இலக்கியம் தமிழ் உலகத்தில் கடித இலக்கியத்தை வளர்த்த பெரும
க்களின் வரிசையில் டி.கே.சி.க்கும் ஓர் இன்றியமையாத இடம் உண்டு.
தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்,'ரஸிகமணி டி.கே.சி.யின் கடிதங்கள்'
என்னும் தலைப்பில் 1961ல் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார்.
டி.கே.சி.யின் கடிதங்களில் ஆங்காங்கே மெல்லிய நகைச்சுவை உணர்வு
களிநடம் புரிந்து நிற்கும் இடங்கள் உண்டு. அருமை நண்பர் ஏ.கே.கோ
பால பிள்ளைக்கு டி.கே.சி. 01.11.46
ல் எழுதிய கடிதத்தில் ஒரு பகுதி:“பம்பாயில் நான் இருப்பது
அதிசயமாய் இருக்கலாம் தங்களுக்கு. உண்மையில் அதிசயந்தான்.
நானாக இங்கு வரவில்லை. ஸ்ரீமதி எம்.எஸ்.சுப்புலட்சுமியின் கச்சேரி
திருச்சியில் 20.10.46 அன்று நடந்தது. அதற்காக என்னை
அழைத்தார்கள். நானும் போனேன். கச்சேரி முடிந்ததும் ரயிலில்
தூக்கிப் போட்டார்கள் எம்.எஸ்.ஸும் சதா சிவமும். மறுநாள் காலை
7 மணிக்கு சென்னை சென்றோம். அப்படியே 10 மணிக்கு ஆகாய
விமானத்தில் தூக்கிப் போட்டார்கள். சாயங்காலம் 4 மணிக்கு
பம்பாயில் இறக்கினார்கள். இதுதான் பம்பாய்க்கு வந்த கதை...”
மூத்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் 'மாந்தருள் ஒரு அன்னப் பறவை'
என்னும் நூலில் டி.கே.சி.யைக் குறித்து எழுதி இருக்கும் வைர வரிகள்
இவை:“கவிதைகளை மட்டுமல்ல, வாழ்க்கையை எப்படிப் பார்க்கிறது,
அனுபவிக்கிறது என்று கற்றுத் தந்தார் அது தான் ரொம்ப விசேஷமாகப்
படுகிறது எனக்கு... என்னுடைய சின்ன வயசில் அன்னப்
பறவையைப் பற்றிச் சொல்லக் கேட்டிருக்கிறேன். தண்ணீர் கலந்த
பாலில் பாலை மட்டும் உறிஞ்சி உண்டுவிட்டு தண்ணீரை அப்படியே
விட்டுவிடுமாம். டி.கே.சி.யும் ஒரு அன்னப் பறவையே. நல்லதுகளையும்
சிறந்ததுகளையும் எடுத்துக்கொண்டார். அதைப் பற்றியே பேசினார்
பாராட்டினார் தமிழகத்துக்கு இப்படி இன்னொரு அன்னப் பறவை
கிடைக்குமா?” ஒன்று மட்டும் உண்மை. உலகில் ரசனையும் நகைச்சுவை
யும் இருக்கும் வரை 'மாந்தருள் ஒரு அன்னப் பறவை'யாம் டி.கே.சி.யும்
நிலைத்து இருப்பார்.

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)

ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் (1881-1954) ஒரு சிறந்த தமிழ் அறிஞர், வழக்கறிஞர், எழுத்தாளர் மற்றும் இலக்கியத் திறனாய்வு முன்னோடி ஆவார். குற்றாலத்தில் "வட்டத்தொட்டி" என்ற இலக்கிய அமைப்பை உருவாக்கி, கம்பராமாயணம் உள்ளிட்ட மரபிலக்கியங்களை ரசித்துப் பாடி, தமிழ் இலக்கிய வாசிப்பை ஓர் இயக்கமாக மாற்றியவர்.

முக்கிய தகவல்கள்:

- **பிறப்பு:** 1881 செப்டம்பர் 11, ஸ்ரீவில்லிபுத்தூர் (தென்காசி).
- **சிறப்புப் பெயர்:** ரசிகமணி டி.கே.சி.
- **பணி:** வழக்கறிஞராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கி, பின் இலக்கியத் துறையில் முழுமையாக ஈடுபட்டார்.
- **இலக்கியப் பணி:** கம்பர் தரும் ராமாயணம், இதய ஒலி போன்ற நூல்களை எழுதியுள்ளார். கம்பராமாயணத்தில் உள்ள கம்பனின் கவிநயத்தை ரசித்து போற்றியவர்.
- **வட்டத்தொட்டி:** குற்றாலத்தில் தன் இல்லத்தில் "வட்டத்தொட்டி" என்ற அமைப்பின் மூலம், தமிழறிஞர்கள் மற்றும் ரசிகர்களைக் கூட்டி, மரபிலக்கியங்களைச் சுவைக்கச் செய்தார்.
- **மறைவு:** பிப்ரவரி 16, 1954.

டி.கே.சி அவர்களின் தமிழ் இலக்கியப் பணி, குறிப்பாகப் பழந்தமிழ் நூல்களின் மீதான ரசனை வாசிப்பு, தமிழ் இலக்கிய உலகில் புதிய பார்வையை உருவாக்கியது.

இலக்கியவாழ்க்கை

டி.கே.சிதம்பரநாத முதலியார் முதன்மையாக இலக்கிய வாசகர். கம்பராமாயணம் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்களை ரசிப்பதும் அவற்றைப் பற்றி உரையாடுவதுமே அவருடைய வாழ்க்கையாக இருந்தது. இலக்கிய உரையாடலுக்கான நண்பர்க்குழாம் அவருக்கு எப்போதும் இருந்தது. மிகக்குறைவாகவே அவர் தன்னுடைய

ரசனையை பதிவுசெய்திருக்கிறார். அவையும் ரசனைக்குறிப்புகள் மட்டுமே. இலக்கிய விமர்சனத்திற்குரிய ஒப்பீட்டுப்பார்வை, ஆய்வுப்பார்வை, தொகுப்புப்பார்வை கொண்டவை அல்ல அவருடைய எழுத்துக்கள்.

வட்டத்தொட்டி

1924 முதல் திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் குடியிருந்த காலகட்டத்தில் டி.கே.சி தன் வீட்டில் இலக்கியசங்கம் என்னும் அமைப்பை தொடங்கினார். ஆனால் அது அவர் இல்லத்தின் நடுமுற்றத்தில் நிகழ்ந்தமையால் பேச்சுவாக்கில் வட்டத்தொட்டி என்று அழைக்கப்பட்டு அவ்வாறே நீடித்தது. திருநெல்வேலியில் அன்று வாழ்ந்த இலக்கிய ஆர்வலர்களும், சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார், கல்கி போன்ற இலக்கியவாதிகளும் அங்கே வந்தனர். அங்கே இலக்கிய ரசனைவிவாதம் நடைபெற்றது. (பார்க்க வட்டத்தொட்டி)

கம்பராமாயண ஆய்வு

டி.கே.சி தமிழில் முதன்மையான படைப்பாக கம்பராமாயணத்தையே கருதினார். தொடர்ந்து அதில் ரசனை ஆய்வு செய்துவந்தார். திருநெல்வேலி அறிஞர்களால் தொகுக்கப்பட்ட மர்ரே ராஜம் நிறுவனத்தின் கம்பராமாயண பதிப்பில் பங்கெடுத்தார். பின்னர் கம்பராமாயணத்தில் இடைச்செருகல்கள் என சில பாடல்களை வகுத்து,அவற்றை நீக்கி, புதிய கம்பராமாயணப் பதிப்பை வெளியிட்டார். கவிதைச்சுவை அற்றவை என அவர் எண்ணிய பாடல்கள் பெரும்பாலானவற்றை கம்பர் எழுதியவை அல்ல என அவர் எண்ணினார். ஆய்வுக்குரிய முறைமையை முன்வைக்காமல் வெறுமே தனிப்பட்ட ரசனையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அந்த தெரிவு செய்யப்பட்டமையால் அவருடைய அந்த திருத்தப் பணி கம்பராமாயண அறிஞர்களிடம் எதிர்ப்பைப் பெற்றது.

கடித இலக்கியம்



டிகேசி -ஈஸ்வரமூர்த்தியா பிள்ளை

தமிழிலக்கியத்தில் டி.கே.சியின் கொடை என கருதப்படுவது கடித இலக்கியம். டி.கே.சி கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை , கல்கி, ராஜாஜி போன்றவர்களுக்கு எழுதிய கடிதங்கள் இலக்கியத்தரம் வாய்ந்த விரிவான ரசனைக்குறிப்புகள் மற்றும் அனுபவப்பதிவுகள். அவை பின்னர் நூலாயின. அந்த வகையான கடித இலக்கிய மரபு திருநெல்வேலியை மையமாக்கி நீண்டகாலம் தொடர்ந்தது. கி.ராஜநாராயணன் , கு.அழகிரிசாமிவல்லிக்கண்ணன், வண்ணதாசன் போன்றவர்கள் கடித இலக்கியத்தில் கொடைகள் வழங்கியிருக்கிறார்கள். அவர்களின் கடிதங்கள் நூல்வடிவம் பெற்றுள்ளன.

கலைச்சொல்லாக்கம்

டி.கே.சி எஸ். வையாபுரிப் பிள்ளை ஆசிரியராகப் பணியாற்றிய தமிழ் பேரகராதி திட்டம், பெரியசாமி தூரன் ஆசிரியராக இருந்த தமிழ் கலைக்களஞ்சியத் திட்டம், மு. அருணாசலம் உருவாக்கிய தமிழிலக்கிய வரலாறு ஆகிய பெரும்பணிகளில் உறுதுணையாக இருந்தார். ஆங்கில, சம்ஸ்கிருதச் சொற்களுக்கு மாற்றாகத் தமிழ்ச் சொற்களை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

Radio என்ற சொல்லுக்கு வானொலி, Culture என்ற ஆங்கிலச் சொல்லுக்கு கலாச்சாரம் பின்னர் பண்பாடு போன்ற சொற்களை அவர் உருவாக்கினார்.



டிகேசி கல்கியுடன். பின்பக்கம் அவர் மகன் தீத்தாரப்பன்

விமர்சனங்கள்

டி.கே.சிதம்பரநாத முதலியாரின் ரசனை விமர்சனம் மீது நவீன இலக்கியவாதிகளான புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, கி.ராஜநாராயணன் ஆகியோருக்கு ஈடுபாடு இருந்தது. அழகிரிசாமியும் கி.ராஜநாராயணனும் அவரை தங்கள் ஆசிரியராகவே கொண்டவர்கள். நவீன இலக்கிய விமர்சகரான க.நா.சுப்ரமணியம் டி.கே.சியை புகழ்ந்து அவருடைய இலக்கியவட்டம் இதழில் எழுதினார். பின்னர் விரிவான ஆய்வுக்குறிப்பையும் எழுதினார். சுந்தர ராமசாமியும் டி.கே.சியை புகழ்ந்து டி.கே.சியின் இதய ஒலி என்னும் கட்டுரையை எழுதினார்.


ஆனால் மரபிலக்கியத்தில் டி.கே.சியின் ரசனையை ஏற்றுக்கொண்ட அவர்கள் டி.கே.சியின் நவீன இலக்கிய ரசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. டி.கே.சி நவீன தன் சமகால இலக்கியத்தில் கவிஞராக கவிமணி தேசிகவினாயகம் பிள்ளையையும் உரைநடையில் கல்கியையும்
முதன்மைப்படுத்தினார். அ.சீனிவாசராகவன், மீ.ப.சோமு ஆகியோரை பாராட்டினார். நவீன எழுத்தாளர்களின் பார்வையில் அவர்கள் பொதுவாசிப்புக்குரிய எளிமையான படைப்பாளிகள் மட்டுமே. டி.கே.சி நவீன எழுத்தாளர்களான புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், மௌனி, ந.பிச்சமூர்த்தி, லா.ச.ராமாமிர்தம் ஆகியோரை ஏற்றுக்கொள்ளவில்லை. நவீன இலக்கியத்தின் அழகியலே அவருக்கு பிடிகிடைக்கவில்லை என்று சுந்தர ராமசாமி குறிப்பிடுகிறார்

டி.கே.சியின் ரசனை விமர்சனம் சொல்லழகு, அணியழகு ஆகியவற்றை மட்டுமே கருத்தில்கொண்டது என்றும் கவிதையின் சாரமான மெய்மை வெளிப்பாடு அவரால் கருத்தில் கொள்ளப்படவில்லை என்றும் பிற்கால விமர்சகர்கள் சுட்டிக்காட்டினர். கம்பராமாயணத்துக்கு நிகராகவே முத்தொள்ளாயிரத்தையும் வைக்கும் டி.கே.சியின் பார்வை மறுக்கப்பட்டுள்ளது.

மார்க்ஸிய விமர்சகர்கள் டி.கெ.சியின் ரசனை விமர்சனம் என்பது இலக்கியத்தின் இலட்சியவாத நோக்கம், கருத்தியல் செயல்பாடு ஆகியவற்றை நிராகரிக்கும் மேட்டிமைப்பார்வை என்று விமர்சித்தனர். நா.வானமாமலை, அ.மார்க்ஸ் ஆகியோர் டி.கே.சியை நிராகரித்துள்ளனர்.

https://www.hindutamil.in/news/blogs/190859-10.html

ரசிகமணி டி.கே.சி.



ராஜலட்சுமி சிவலிங்கம்

தமிழின் பெருமையை அனைவரையும் உணர வைத்த தமிழறிஞரும் டி.கே.சி என அழைக்கப்பட்டவருமான டி.கே.சிதம்பரநாதன் முதலியார் (T.K.Chidambaranatha Mudaliar) பிறந்த தினம் இன்று (ஆகஸ்ட் 18). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து.

ஸ்ரீவில்லிபுத்துரில் பிறந்தவர் (1881). இவரது இயற்பெயர் சிதம்பரநாதன். தென்காசியில் ஒரு திண்ணைப் பள்ளியில் ஆரம்பக் கல்வி பயின்றார். தாய் மீனம்மாளிடம் தினமும் மகா பாரதம், திருவிளையாடற் புராணக் கதைகளைக் கேட்டது சிறுவனுக்குள் கேள்வி ஞானத்தையும் சொல்லாற் றலையும் விழுதுவிட வைத்தன.

திருச்சி தேசிய உயர்நிலைப் பள்ளியிலும் பின்னர் சென்னை கிறித்தவக் கல்லுரியில் பட்டப் படிப்பும் பயின்றார். பின்னர் அங்கு தமிழ்ப் பேரவைத் தலைவரானார். மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவனர் பாண்டித்துரைத் தேவருக்கு தமிழ்ப் பேரவை சார்பில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இவர் நிகழ்த்திய வரவேற்புரை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தமிழறிஞர் உ.வே.சாமிநாத அய்யர் உள்ளிட்ட சான்றோர்களை மிகவும் கவர்ந்தது. தமிழ் இவரிடம் கொஞ்சி விளையாடுவதை அறிந்த மகாகவி பாரதியார் இவரை அடிக்கடி சந்தித்தார்.

திருவனந்தபுரத்தில் சட்டம் பயின்று 1915-ல் வழக்கறிஞரானார். திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் குடியேறினார். அந்த இல்லம் தமிழ் மாமன்றமாக மாறியது. தமிழ்க் கவிதைகளில் புதைந்து கிடந்த ஆழமான கருத்துகளையெல்லாம் வெளிக்கொணர்ந்து அவற்றின் சுவையை ஏராளமானோரை அனுபவிக்க வைத்ததால் ‘ரசிகமணி’ எனப் போற்றப்பட்டார்.

இவர் வீட்டில் கூடும் தமிழ் அன்பர்களிடையே, கம்பனின் கவியாற்றலையும் அவர் பெருமைகளையும் இவர் விவரிக்கும் பாங்கு கேட்போரை மெய்மறக்க வைத்தது.

வாரம் ஒருமுறை நடைபெறும் இந்த இலக்கிய முற்றம் ‘டி.கே.சி. வட்டத்தொட்டி’ எனப் பிரபலமடைந்தது. 1926-ல் சென்னை மாகாண சட்டமன்ற மேலவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதையடுத்து இந்து அறநிலையத்துறை ஆணையராகப் பொறுப்பேற்றார். கம்பராமாயணத்தில் ஆழமாக மூழ்கிய இவர், அந்தக் காவியத்தில் சேர்க்கப்பட்டிருந்த ஏராளமான இடைச்செருகல்களை அடையாளம் கண்டார்.

அவற்றை நீக்கி, கடும் எதிர்ப்புக்கிடையே புதிய கம்பராமாயணப் பதிப்பை வெளியிட்டார். காந்தியடிகள் ஒருமுறை சென்னை வந்தபோது ராஜாஜி இவரை அவருக்கு அறிமுகம் செய்துவைத்தார். கம்பராமாயணத்தின் சில பாடல்களை ராகத்துடன் இவர் பாடக் கேட்ட காந்தியடிகள் இந்தக் காவியத்தை அதன் மூலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றதும் இவரோ ‘அதற்கு நீங்கள் தமிழனாகப் பிறக்க வேண்டும்’ எனக் குறிப்பிட்டார்.

‘கம்பனைப் போன்று ஒரு ரசிகன் கிடைப்பதற்கு வள்ளுவர் 700 ஆண்டுகள் காத்திருந்தார். டி.கே.சி.யைப் போன்ற ஒரு ரசிகன் கிடைப்பதற்கு கம்பன் 1000 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது’ என ஜஸ்டிஸ் மகாராஜன் இவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

இசைக்கச்சேரிகளில் தமிழ்ப்பாடல்கள் இசைக்கப்பட வேண்டியது குறித்து இவர் எழுதிய கட்டுரைகளைப் படித்த செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார், 1941-ல் தேவகோட்டையில் நடைபெற்ற இசை மாநாட்டில் இவரது சிறப்புரையை கேட்டு, தமிழ் இசையை பரப்பும் பணியைத் தொடர ரூ.30,000 நிதி கொடுப்பதாகவும் அறிவித்தார்.

இதையடுத்து சென்னையில் தமிழிசை மன்றம் தொடங்கப்பட்டது. எம்.எஸ்.சுப்புலட்சுமி, தண்டபாணி தேசிகர் உள்ளிட்டோர் டி.கே.சி. தலைமையில் தமிழிசை மன்றம் நடத்திய இசை மாநாட்டில் தமிழ்ப் பாடல்களைப் பாடினார்கள். ‘வட்டத்தொட்டி நாயகர்’, ‘வளர்தமிழ் ஆர்வலர்’, ‘ரசிகமணி’, ‘குற்றால முனிவர்’ என்றெல்லாம் போற்றப்படும் டி.கே.சிதம்பரநாத முதலியார் 1954-ம் ஆண்டு 73-ம் வயதில் மறைந்தார்.



டி.கே.சி -பிச்சம்மாள்



டிகேசி முதுமையில்



டிகெசியும் ராஜாஜியும்



டிகேசி -ஈஸ்வரமூர்த்தியா பிள்ளை



டிகேசி கல்கியுடன்.
பின்பக்கம் அவர் மகன்
தீத்தாரப்பன்



டிகேசி - தேசிகவினாயகம் பிள்ளை



டிகேசி சிலை

டி கே சி இணையதளம்

http://www.rasigamanitkc.org/

"தமிழருக்குத்

தமிழே

துணை"

என்னும் மந்திரத்தை தமிழர்களிடம் சொன்னவர் டி.கே.சி.

டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களை தமிழ் ஆர்வலர்களும், இலக்கிய ரசிகர்களும், நண்பர்களும் அன்புடன் டி.கே.சி. என்று அழைத்தனர். டி,கே,சி, என்ற மூன்றெழுத்தால் தமிழகம் முழுவதும் மதிக்கப்பட்டவர் ஆனார் அதுமுதல்.

"ரசிகர் என்றால் தேன்வண்டைப்போல் அனுபவிப்பதுதான். மறுபடியும் மறுபடியும் புஷ்பத்தில் வந்து விழவேணும். கவியை விட்டு நம்மால்ப் போக முடிகிறதா. இல்லை"

மேலேகண்ட டி.கே.சி.யின் வாக்கு அவரையே நமக்கு இனம் காட்டுகிறது.

கவிதையை அனுபவிக்க வேண்டும். கவிதையிலேயே மூழ்க வேண்டும். இதுதான் டி.கே.சி.க்கும் பிற தமிழறிஞர்களுக்கும் இடையில் இருந்த பெரிய வித்தியாசம்.

எந்தவொரு கலைஞனுக்கும் தான் வெளிப்படுத்தும் கலை ஒரு ரசிகனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுபவிக்கத் தக்கதாய் அமையவேண்டும் என்பதுவே குறிக்கோளாக இருக்கும்.

ரசிகனால் ரசிக்கப் படுவதற்காகவே தனது கவிதை இருத்தல் வேண்டும் என்ற எண்ணத்துடனேயே கவிஞன் கவிதையைப் படைத்து அளிக்கிறான்.

கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு 1000 ஆண்டுகள் கழிந்த பிறகு தோன்றிய ரசிகர்தான் ரசிகமணி டி.கே.சி.

டி.கே.சி. வாழ்வு முழுமையும் கம்பர், கம்பர் என்றே கூறி வந்தவர். கம்பரை அனைவருக்கும் அறிமுகப் படுத்துவதும், கம்பர் கவியை அனுபவிக்கச் செய்வதுமே டி.கே.சி. அவர்களின் மூச்சுக் காற்றாக இருந்துள்ளது.

கம்பருக்காகவும் தமிழுக்காகவும் தமிழ் நாட்டில் பிறப்பெடுத்து வந்தவர் ரசிகமணி டி.கே.சி.
டி.கே.சி.க்கு குருவும் கம்பர் தான். கடவுளும் கம்பர் தான்.

ரசிகமணி டி.கே.சி.யின் பெருமையை மூதறிஞர் ராஜாஜி அவர்கள் எவ்வாறு கணித்தறிகின்றார் என்பதை இப்போது பார்க்கலாம்:

"ராமாயண கதை நம்முடைய நாட்டின் தங்கச் சுரங்கம். அதிலும் கம்பன் பாடிய ராம கதை இருபத்தி நான்கு மாற்று அபரஞ்சி. இந்தத் தங்கத்தை எடுத்துக் காட்டிய தங்க நிபுணர்களுக்குள் நம்முடைய டி.கே.சி. அவர்கள் முதல் இடம் பெற்று விட்டார், இதை யாரும் எந்தப் புலவரும் மறுக்க முடியாது

ஸ்ரீராமபிரான் எப்படிக் கம்பன் உள்ளத்தில் மற்றும் ஒரு முறை அவதரித்தானோ, அவ்வாறே கம்பனும் டி.கே.சி.யின் உள்ளத்தில் மறுபடியும் அவதரித்தான், தற்காலத் தமிழருக்காக என்று நான் சொல்லுவேன்"

கம்பர் கவிதைகளை தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்வித்ததைப் போல, மேலும் பல நூலாசிரியர்களையும், தனிப் பாடல்களையும் எடுத்துச் சொல்லி கற்றோரும் மற்றோரும் உணர்ந்து கொள்ளச் செய்தார் ரசிகமணி டி.கே.சி. என்பதையும் எண்ணிப்பார்த்திட வேண்டும்.

டி.கே.சி.அவர்கள் தமிழர்களுக்கு தமிழ் உணர்வு ஊட்டிய மகான். ஆங்கில மோகத்தில் மூழ்கிக் கிடந்த பற்பல அறிஞர்களையும்

தமிழிலே பேசவும் எழுதவும், தமிழ் மேல் ஆசை கொள்ளவும், தமிழார்வம் மிக்கவர்களாக உருமாற்றம் பெற வைத்த அரும்பணியைச் செய்தவரும் டி.கே.சி.தான் என்பதை எண்ணி ஒவ்வொரு தமிழனும் பெருமை அடையலாம்.

கம்பரை எவ்வாறு தமிழ் மக்கள் இனம் கண்டு கொள்ள வைத்தாரோ அதேபோன்று தம் சமகால கவிஞர் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களையும் தமிழ் மக்களிடையே எடுத்துச் சொல்லி கவிமணியின் பெருமையை உணர்ந்து கொள்ளச் செய்தவரும் டி.கே.சி.தான்.

கவிமணி அவர்கள் ரசிகமணி குறித்து எழுதிய சில வரிகள் கீழே தரப்படுகின்றன:

"கம்பராமாயணத்தை இன்று தமிழுலகம் அறிவதற்கும் மதிப்பதற்கும் படிப்பதற்கும் காரணமாயிருந்தவர் நம் ரசிகமணி அவர்களே. ஷேக்ஸ்பியர் கவிதைத் தரத்தைவிடக் கம்பன் கவிதை ஒரு சிறிதும் தாழ்வில்லாதது என்று சொன்னாற்போதாது. அதனினும் மேம்பட்டதாகும் என்று ஆங்கிலம் கற்ற புலவர்களிடையே அஞ்சாமல் எடுத்துக் கூறின ஆண்மையாளர் அவர்.

அந்தக் கருத்தை எழுத்துக்களின் மூலமும் சொற்பொழிவுகளின் மூலமும் ஓயாமல் எடுத்து விளக்கி நிலைநாட்டிக் கம்பர் கவிதைக்கு ஏற்றம் தந்த பெருமை நம் ரசிகமணி அவர்களையே சாரும்

ஆங்கிலம் கற்றவரே கற்றவரென்றும், தமிழ்க் கல்வி இழிவானது என்றும், தமிழில் பேசுவதும் எழுதுவதும் அநாகரிகமென்றும் எண்ணி வந்த காலமொன்றிருந்தது.

பட்டதாரிகள் பலர் மேடை மீதேறி நின்று எனக்குத் தமிழில் பேச வராது; ஆங்கிலத்திலேதான் பேச முடியும் என்று பெருமையோடு சொல்லி வந்தார்கள். அந்தக் காலத்தில் நமது ரசிகமணி 'தமிழில் சொல்ல முடியாதது என்ன உண்டு?' என்று ஆர்வத்தோடு கூறி,

அவர்களைத் தமிழாசையும் கவிதை வெறியும் கொள்ளச் செய்தார்கள்.

அவர்,யாவருக்கும் உத்தம நண்பர், எனக்கு உயிர் நண்பர். என்னைத் தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று உபசரித்ததை நான் என்றும் மறக்க முடியாது. அன்னை போலிருந்து என்பால் அன்பு சொரிந்தார். அருவியில் நீராட்டினார். அருகிலிருந்து உணவூட்டி உபசரித்தார். என்னைப் பாராட்டினார். என் கவிதைகளைப் பாராட்டினார்."

டி.கே.சி.அவர்கள் மரணம் நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் தமிழ் மக்களுக்கு விடுத்த செய்தியோடு இந்த அறிமுக உரையை நிறைவுக்கு கொண்டுவருவோம்:

"டி.கே.சி. என்று ஒருவன் இருந்தான். அவன் ' தமிழைப் போன்ற உயர்ந்த மொழி உலகத்திலேயே கிடையாது. கம்பரைப் போன்ற உயர்ந்த கவிஞன் உலக இலக்கியத்தில் கிடையாது' என்று சொல்லுவான் என்பதை நீங்கள் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். மற்றவர்களையும் சொல்லச் செய்ய வேண்டும். 500 ஆண்டுகள் அல்லது, 1000 ஆண்டுகள் கழிந்த பின்னாவது நான் சொன்னதை உண்மை என்று உலகமே ஒப்புக்கொள்ளும்"

வாழ்க்கைக்குறிப்பு :

டி .கே .சி பெயர் காரணம்

டி - தீத்தாரப்பமுதலியார்
கே - கிளங்காடு (பூர்விகம்)
சி - சிதம்பரநாதமுதலியார்

கி .பி 1881 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் தேதி (18-8-1881) ஆவணி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் -கிருஷ்ண ஜெயந்தி அன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தார் . இவரது பெற்றோர் தீத்தா ரப்பமுதலியார் மீனம்மாள் அண்ணி .

ஆரமபக்கல்வி தென்காசியிலும் உயர்கல்வி திருச்சியிலும் பட்டப்படிப்பு (B.A) சென்னை கிறிஸ்தவ கல்லூரியிலும் சட்டப்படிப்பு (B.L) திருவனந்தபுரத்திலும் படித்தார்கள் . 1908ஆம் வருடத்தில் தனது மாமா மகளான பிச்சம்மாளை திருமணம் செய்துகொண்டார்கள். இவர்களுக்கு 1909ஆம் வருடத்தில் தீபன் என்ற தீத்தாரப்பன் பிறந்தார் .

சிறிதுகாலம் வண்ணார்பேட்டையில் வழக்கறிஞர் பணி புரிந்தார்கள் . . அதன்பின் மலேரியா காய்ச்சல் வந்த பொழுது கம்பராமாயணம் படிக்க ஆரம்பித்தார். வழக்கறிஞர் தொழிலை மறந்தார் .அதனால் இலக்கியப்பணி ஆரம்பம் வட்டத்தொட்டி நட்புகுழாம் ஆரம்பம் .
1928-1930. ---- சட்டமேலவை உறுப்பினர்
1930-1935. ---- இந்து அறநிலையத்துறை ஆணையர்
1941 ஆண்டு தன் மகன் தீபன் இறந்த பின்னர் குற்றாலத்தில் குடும்பத்தாருடன் வாசம் செய்தார். குற்றாலத்தில் வாழ்நாள் முழுவதும் இலக்கியப் பணியாற்றியும் விருந்தோம்பல் வேள்வி செய்தும் வாழ்ந்து வந்தார். 16.02.1954 அன்று நல் விருந்து வானத்தவர்க்கு என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கு இணங்க இவ்வுலக வாழ்வை நீத்தார்.

டிகேசி கொடை

பண் என்ற சொல்லும் பாடு என்ற சொல்லும் பழந்தமிழ் இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ள சொற்கள் தாம். ஆனால் அவ்விரு சொற்களையும் இணைத்து “பண்பாடு” என்ற சொல்லைத் தமிழுலகுக்குக் கொடுத்தவர் ரசிகமணி டிகேசி. “கல்ச்சர்” என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ப்பதமாக பண்பாடு என்ற சொல்லை உருவாக்கியவர்.

அகில இந்திய வானொலி நிலையம் என்று தற்போது சொல்லப்படுகிறது. ரேடியோ என்ற சொல்லுக்கு வானொலி என்ற சரியான தமிழ்ப்பதத்தைக் கொடுத்தது ரசிகமணி. பின்னால் வானொலி என்ற இதழ் வெளிவந்தது. அதற்கு ஆசிரியராக இருந்தவர் ரசிகமணியின் புதல்வர் தீபன் என்ற தீத்தாரப்பன் அவர்கள்.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாகாண முதல்வராக இருந்த போது தமிழக அரசுக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் கோபுரத்தை சின்னமாக வைக்க ரசிகமணி பரிந்துரை செய்த போது அதை அப்படியே ஏற்றுக்கொண்டு செயல்படுத்தினார்.

ஓவியம், சிற்பம் ஆகிய கலைச் செல்வங்களும் டிகேசியின் கலைக் கண்ணோட்டத்திலிருந்து தப்பவில்லை. தென்காசி கோயில் மகா மண்டபத்தில் பத்துத் தூண்களில் வடித்துள்ள சிற்பங்களை உலகறியச் செய்தது. அந்தச் சிற்பங்களையெல்லாம் படமெடுத்து கல்கி தீபாவளி மலரின் வெளிவரச் செய்தவர்.

தென்காசி கோயிலைக் கட்டிய பராக்கிரம பாண்டிய மன்னனுக்கு, கோயில் பின்னாளில் கேடு அடையும் என உள்ளுணர்வு சொல்லியதால், "அக்கேட்டினை நீக்கி செப்பனிட்டு சரி செய்வோரை இன்றே பணிகின்றேன்" என்று கல்வெட்டில் பாடலாக வடித்துள்ளான். டிகேசி அக்கல்வெட்டைக் கண்டுபிடித்து அப்பாடலை உலகறியச் செய்தார்கள்.

"ஆராயினும் இந்தத் தென்காசி மேவு பொன் ஆலயத்து வாராததோர் குற்றம் வந்தால் அப்போழ்து அங்கு வந்ததனை நேராகவே ஒழித்துப் புரப்பார்களை நீதியுடன் பாரார் அறியப் பணிந்தேன் பராக்கிரம பண்டியனே"!

இப்பாடலைக் கோயிலில் உள்சுவரில் எழுதிப் போட்டிருக்கிறார்கள்.

டிகேசி, குற்றாலத்தில் கிணற்றுக்குள் கிடந்த பெரிய கற்களை வெளியே கொண்டு வரச் செய்த போது அரிய சிலைகள் வெளியே வந்தன. அச்சிலைகளை குற்றாலத்தில் உள்ள சித்திரசபை மண்டபத்தில் நிறுவிய பெருமை ரசிகமணியையே சாரும்.

மேற்கோள்கள்

http://www.rasigamanitkc.org/quotes.html



கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

"அன்னை போல் என்னை அருவியில் நீராடி
இன்னமுதும் பக்கத்து இருந்தூட்டி - தன்னோடு
தங்குதங்கு என்று சொன்ன தங்கக்குணத்தானை
எங்குநான் காண்பேன் இனி"

கம்பராமாயணத்தை இன்று தமிழுலகம் அறிவதற்கும் மதிப்பதற்கும் படிப்பதற்கும் காரணமாயிருந்தவர் நம் ரசிகமணி அவர்களே. ஷேக்ஸ்பியர் கவிதைத் தரத்தைவிடக் கம்பன் கவிதை ஒரு சிறிதும் தாழ்வில்லாதது என்று சொன்னாற்போதாது, அதனினும் மேம்பட்டதுமாகும் என்று ஆங்கிலம் கற்ற புலவர்களிடையே அஞ்சாமல் எடுத்துக் கூறிய ஆண்மையாளர் அவர்.



ராஜாஜி

ஸ்ரீராமபிரான் எப்படிக் கம்பன் உள்ளத்தில் மற்றும் ஒரு முறை அவதரித்தானோ, அவ்வாறே கம்பனும் டி கே சி யின் உள்ளத்தில் மறுபடி அவதரித்தான், தற்காலத்துத் தமிழருக்காக, என்று நான் சொல்லுவேன்.



கல்கி

உண்மையான கவிதையின் உருவத்தையும் ஆத்மாவையும் நன்குணர்ந்து, அவற்றைப் பிறருக்கும் புலப்படும்படி காட்டக்கூடியவர் தமிழ் நாட்டிற்குள் டி கே சி யைப் போல் வேறு யாருமில்லை என்று கருதத் தொடங்கினேன். டி கே சி யினால் தள்ளப்பட்ட ஒரு பாட்டைக் கம்பனே நேரில் வந்து "இதை நான் தான் எழுதினேன்" என்று சொன்னாலும், என்னால் ஒப்புக்கொள்ளமுடியாது! அவ்வளவு நம்பிக்கை டி கே சி யின் கவிதை உணர்ச்சியில் ஏற்பட்டது.



கலைமணி பாஸ்கரத் தொண்டைமான்

டி கே சி குற்றாலத்தில் பர்ணசாலை கட்டியிருக்கவில்லை, யோகதண்டமும், கமண்டலமும் தாங்கி நடக்கவில்லை, சடைமுடி, புலித்தோல் ஆடை உடுக்கவில்லை, என்றாலும் பொதிகை முனிவராக வாழ்ந்தார். முத்தமிழையும் வளர்த்தார்.காஷாயம் தரிக்காமல், அன்பையே கோலமாக அணிந்திருந்தார். கமண்டலம் ஏந்தாமல் கையிலே தமிழ்க் கவிதையை ஏந்தினார். கடவுளையும் கவிதையையும் ஒன்றாக மதித்தார்.



ஜஸ்டிஸ் எஸ். மகராஜன்

நம்முடைய ஞானிகள் பலரும் ஆனந்தத்தை அடைவதற்கான பல தந்திரங்களைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். "நான்" என்ற ஒன்று இருக்கிறதே அதை மாத்திரம் மடக்கி விட்டால், ஆனந்தம் பொங்கி வழிய ஆரம்பித்துவிடும் என்று கண்டார்கள். ஆனால், அந்த காரியத்தைச் சாதிப்பதிலே எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அப்படிக் கஷ்டப்பட்டு, ஆணவத்தை வென்று, ஆனந்தத்தை சில ஞானிகள் அடைந்தார்கள்.

இருபது ஆண்டுகள் டி கே சி யோடு நெருங்கிப் பழகினபோது, ஆனந்தத்தை அடைவதற்கு இப்படியெல்லாம் அவஸ்தைப் பட வேண்டாம் என்று தெரிந்தது.உணர்ச்சியோடு கவி உலகத்திலே புகுந்து விட்டால், "தன்னை மறந்த லயம்" தானே பிறந்து விடும் என்று தெரிந்தது. நல்ல பாடலுக்குள்ளே புகுந்து, நோயை மறந்து, ஐந்து மணி நேரம்,ஆறுமணி நேரம் சமாதியிலிருப்பார்கள். கூடியிருக்கும் சகாக்களையும் ஆனந்த அனுபவத்திலேயே அழுத்திவிடுவார்கள். டி கே சி யை விட்டுப் பிரிந்து போன பிறகும் பாடல் நம்மை விட்டுப் பிரிவதில்லை; மனசுக்குள்ளே நின்று ரீங்காரம் செய்யும்; ஆழமான ஒரு மனநிலையிலே நம்மை நிலைக்கச் செய்துவிடும்.



கி.ராஜநாராயணன்

என்னுடைய சின்னவயசில் அன்னப்பறவையைப் பற்றி சொல்லக் கேட்டிருக்கிறேன். தண்ணீர் கலந்த பாலில் பாலை மட்டும் உறிஞ்சி உண்டுவிட்டு தண்ணீரை அப்படியே விட்டுவிடுமாம். டி கே சி யும் ஒரு அன்னப்பறவையே. நல்லதுகளையும் சிறந்ததுகளையும் எடுத்துக் கொண்டார். அதை பற்றியே பேசினார்; பாராட்டினார். போலி கலந்த கவிதைகளில் கவிதையை மட்டும் எடுத்துத் தானும் உண்டு உலகத்துக்கும் கொடுத்தார். தமிழகத்துக்கு இப்படி இன்னொரு அன்னப்பறவை கிடைக்குமா?

ரசிகமணி அவர்களிடமிருந்து நாம் பெற்ற வடிவவிதங்களிலெல்லாம் சிறந்து சோபிப்பது ,அவர் அமர்ந்திருக்க நாமும் அவர்முன் உட்கார்ந்து அவர் பேச நாம் கேட்பதே. உலகத்தின் மகாபெரிய மகான்கள், குரு முனிகள் எல்லோருமே இவ்வித அமர்வுகளிலேயே தங்களை வெளியிட்டிருக்கிறார்கள் . இந்த அமர்வு வாய்க்காத நேரங்களில் ,தனிமையில் சகமனசைத் தேடும்போது ,தூக்கம் வராத நள்ளிரவு நேரங்களில் அவர் கடிதங்களில் பேசுகிறார் .இந்த கடிதத் தொகுப்பு தமிழ் உலகத்துக்கு ஒரு அபூர்வச் செல்வம். தலைமாட்டில் வைத்துக் கொண்டு நினைக்கும் போதல்லாம் கைக்கு வருகிற பக்கங்களைப் படித்து அனுவிக்கலாம் . பாக்கியசாலிகளே நாம்



பன்மொழிப் புலவர் மு கு ஜகந்நாத ராஜா

உலகம் எத்தனையோ ஞானிகளைக் கண்டிருக்கிறது. சிலர் அரசியல் ஞானிகள். சிலர் விஞ்ஞானிகள். சிலர் சமுதாய தத்துவ ஞானிகள். சிலர் மெய்ப்பொருள் ஞானிகள். சிலர் தவ ஞானிகள். ஆனால், ரசிக்கத்துவத்திற்கென ஒரே ஒரு ஞாநியைத்தான் கண்டது. அவரே டி கே சி.



ஆச்சார்ய வினோபாஜி

சத்தியசொரூபமான வினோபாஜியும் சௌந்தர்யசொரூபமான டி கே சி யும் கல்கியின் முயற்சியால் சென்னையில் சந்தித்தார்கள். ரசிகமணி டி கே சி, "சாணிலும் உளன் ஓர்தன்மை அணுவினைச் சதகூறிட்ட கோணிலும் உளன் " என்ற இரண்யவதைப் படலப் பாடலை சவுக்கத்தில் பாதி விளக்கம் செய்துள்ளார்கள். " நீ சொன்ன சொல்லினும் உளன் " என்ற வாக்கியத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே வினோபாஜி உருகிவிட்டார். கம்பனைப் போல இந்தச் சொல்லாட்சியை பிறமொழிக் கவிஞர்கள் எவரும் கையாளவில்லை என்று சொன்ன வினோபாஜி கம்பராமாயணப் பிரதி ஒன்றை வாங்கிப் படிக்கவும் தொடங்கினார்.

ரசிகமணி டி கே சி மறைந்த பின் வினோபாஜி ஜஸ்டிஸ் மஹராஜன் அவர்களுக்கு எழுதிய உருக்கமான கடிதத்தின் பகுதி இங்கே தரப்படுகிறது.

"அன்று அவரைச் சந்தித்த சந்திப்பு என்னுடைய ஞாபகத்தில் மிக மிக அழுத்தமாகப் பதிந்து கிடக்கிறது.அதற்கு முன் டி கே சி யை நான் பார்த்தது இல்லை. ஆனால் அன்று அவர் மனம்திறந்து என்னோடு ஊடாடியபோது நீண்டநெடுங்காலமாகப் பழகி வந்த நண்பர் அவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. வெளிப்பகட்டையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு கவிதையின் இதயத் துடிப்பை அப்படியே எடுத்துக் கூறக்கூடிய ' மர்மக்ஞ ரசிகர் ' அவர். அவரைப் போன்ற ரசிகரைக் காண்பது அரிதினும் அரிது."



மகாத்மா காந்தி

ஒரு முறை சென்னையில் வைத்து ராஜாஜி, ரசிகமணி டி கே சி யை மகாத்மா காந்திக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளார். அப்போது டி கே சி கம்பராமாயணப் பாடல்கள் இரண்டைப் பாடி விளக்கமும் சொல்லியுள்ளார்கள். அதைக் கேட்டு ரசித்த காந்திஜி "கம்பராமாயணத்தை மூலத்திலேயே படித்து அனுபவிக்க வேண்டுமே! என்ன செய்ய?" என்று கேட்ட போது டி கே சி அவர்கள் சிறிதும் தயங்காமல் "அதற்கு ஒரே வழி நீங்கள் தமிழனாகப் பிறப்பது தான்" என்று சொல்லி விட்டார்.



திரு. கண்ணப்ப சுவாமிகள்

டி கே சி யோடு 3 மணி நேரம் உரையாடி விட்டுத் திரும்பிய ஞானி ஒருவர் சொன்ன வாசகம்.

"டி கே சி கந்தர்வலோகத்தைச் சேர்ந்தவர், வழி தப்பி மண்ணுலகுக்கு வந்து சேர்ந்து விட்டார்"

திவான்பகதூர் ஆவுடையப்ப பிள்ளை

"கம்பரும் வெண்ணெய் நல்லூர் வள்ளலும் கலந்து பேசி
இம்பரில் பிறப்போ மாயின் இருகுணம் ஒருங்குசேர
உம்பரின் தேவ தேவை ஒருவரம் கசிந்து கேட்க
செம்பதுமத் தோன் செய்தான் சிதம்பர நாதமாலை"



வித்வான் ல. சண்முகசுந்தரம்

"சைவம் தழைக்கத் தமிழ்த்தழைக்கப் பண்பாட்டின்
மெய்ம்மை தழைத்து விரித்தோங்க -பொய்மையலாம்
தாம்அகல வந்தான் சடைமுடிமேல் திங்களான்
நாமம் டிகேசிஎனக் கொண்டு"

தன்னையும் தன் வாழ்க்கையையும் பார்க்க முடியாத மனிதனால் கலையை எப்படிப் பார்க்கமுடியும்? கவியை எப்படிப் பார்க்கமுடியும்? பிரச்சனைகளோடு சதா மல்யுத்தம் செய்து பழகிப் போனவன் மனிதன். அதனால் கலையோ, கவியோ, பண்பாடோ, எதானாலும் மனிதனுக்கு அவை மல்யுத்தம் செய்யும் ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆனால்,

டி கே சி யோ கவி, கலை, பண்பாடு, சமயம் முதலியவற்றை உண்மையோடு பார்த்தார்கள். தன்னையும் தன் வாழ்க்கையையும் பார்ப்பதற்காகவே அவர்கள் கவி முதலியவற்றைப் பார்த்தார்கள். அதனால் அவற்றை அனுபவித்தார்கள்.ஆனந்த பரவசமாய்த் திளைத்தார்கள். அனுபவமும் ஆனந்தமும் பொங்கப் பொங்க அவை இரண்டும் இல்லாமல் தத்தளிக்கும் மனிதர்களைப் பார்த்து இரக்கப்பட்டார்கள். மற்றவர்களுக்கும் தம் அனுபவங்களையும் ஆனந்தங்களையும் அள்ளி அள்ளிக் கொட்டினார்கள்.

ஏ .என். மகரபூஷணம்

"இதய ஒலி" யும், டி கே சி எழுதியிருக்கும் மற்ற கட்டுரைகளும் வசனத்துக்கு எடுத்துக்காட்டு என்று சொன்னால் இப்போது வெளியிடப்பட்டிருக்கும் கடிதங்களில் அவர்கள் வசன மேதையாக கனிந்து முதிர்ந்து வெளிப்படுவதைக் காண்கிறோம். பேச்சுக்கும்

எழுத்துக்கும் உள்ள இடைவெளி அவர்கள் சம்பந்தப்பட்ட மட்டிலும் எப்பொழுதும் மிகவும் குறைந்தே காணப்படும். இந்தக் கடிதங்களில் இடைவெளி அறவே இல்லை என்று சொல்லும்படி இருக்கிறது. கடிதங்கள் எழுதுவதில் அவர்களுக்கு நிகர் அவர்களே! தமிழில் கடித இலக்கியத்தின் தந்தை டி கே சி தான்!



வே.ஜெயபால்

அருவ விஷயங்களில் கண்டுபிடிப்புகளுக்கு பருப்பொருள்களின் கண்டுபிடிப்புகளை விட கூர்த்த மனம் வேண்டும். ஐன்ஸ்டீனின் கண்டு பிடிப்பை விட பிராய்டின் கண்டு பிடிப்பு அதிக சிரமம்.

நீண்ட காலமாக தமிழ்ச் செய்யுள் என்றால் ஒரு கடினமான பொருள்; அதை உடைத்துக் கொடுப்பதுவே ஆசிரியர்களின் வேலை என்ற எண்ணம் நிலவி வந்தது; ஒரு இன்சுவைப் பழம் என்ற எண்ணம் கிடையாது.

தமிழ்ச் செய்யுள் வகுப்பு என்றால் மாணவர்களுக்கு ஒரு கசப்பான மருந்து சாப்பிடும் நேரம் போலிருந்தது. இந்த நிலையில் தான் முதன் முதலாக கடவுள் என்றால் எளிமை; தமிழ்க்கவி என்றால் அப்படியே; தமிழ்க்கவி மக்களைத் துன்புறுத்த வரவில்லை என்று கூறி அதை நிரூபணமும் செய்தார் டி கே சி.



எஸ் வி எஸ் (டி.கே.சி.யின் தனி செயலாளர்)

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் டி கே சி படித்துக் கொண்டிருக்கும் போதே மகாமகோபாத்தியாய உ வே சாமிநாதய்யரிடம் அறிமுகம் உண்டு. அந்த அறிமுகம் சாமிநாதய்யரின் கடைசிக் காலம் வரை தொடர்ந்தது.

அதன் விளைவாக சாமிநாதய்யர் எளிய பேச்சு நடையில் "கண்டதும் கேட்டதும்", "பழையதும் புதியதும்" போன்ற நூல்களை எழுதினார். நெருடலான பண்டித நடையில் எழுதி வந்தவர் எளிய நடைக்கு மாறுவது என்பது கஷ்டம். டி கே சி யின் கருத்துத் தாக்கத்தால், அதில் உண்மை இருப்பதை உணர்ந்து தமிழ்த் தாத்தா தமது தமிழ் நடையை மாற்றிக் கொண்டது ரசிகமணியின் வெற்றிகளில் மிகச் சிறந்த வெற்றியாகும்.



பி. சி. பலராம ராஜா (டி.கே.சி.யின் தனி செயலாளர்)

நானோ டி கே சி பேரன் நடராஜனோ பள்ளிக்கூடம் சென்றவர்கள் இல்லை.ஆங்கிலம் பள்ளிக்கூடத்தில் படித்தவர்களும் இல்லை. டி கே சி அவர்கள் தான் எங்களுக்கு

ஆங்கிலம் கற்பித்தார்கள். அவர்கள் கற்பிக்கும் பாணி முற்றிலும் மாறுபட்ட பாணியாக இருக்கும்.

A B C D - யிலிருந்து ஆரம்பித்து

C A T - பூனை என்றோ கற்பிக்க ஆரம்பிக்கவில்லை. எடுத்த

எடுப்பிலேயே இந்து பத்திரிக்கையைப் படித்து விளக்குவார்கள். அதையே படிக்கச் சொல்லுவார்கள். நாளடைவில் மொழி பெயர்க்கச் சொன்னார்கள். அர்த்தம் தெரியாத ஆங்கில வார்த்தை வந்தால் ஆங்கிலத்திலே அப்படியே எழுதச் சொல்லிவிடுவார்கள். மறுநாள்

அதற்கு அர்த்தம் சொல்லி விளக்குவார்கள்.இப்படியே நாங்கள் ஆங்கிலம் ஓரளவு கற்றுக் கொண்டோம். ஆங்கிலம் தெரியாது

என்று COMPLEX கொள்ளக்கூடாது.இங்கிலீஸ்காரன் தமிழ் தெரியாது என்று வருந்துவதில்லையே! அதைப்போலவே

பாஷை தெரியாது என வருந்தக் கூடாது. அந்தப் பாஷையை

வருந்திப் படிக்கவேண்டும். ஒரு பாஷையை உத்ஸாகமாகப்

படிக்கப் பழக வேண்டும். முதலில் இலக்கணத்தில் மாட்டிக்கொண்டு மண்டையைக் குழப்பிக் கொள்ளக்கூடாது. பாஷை பிறந்த பிறகுதான் இலக்கணம்

பிறந்தது. குழந்தைகள் இலக்கணம் கற்றா பேசுகிறது? பாஷையைக் கற்று, படிக்கக் கற்று, கவிதைகளைப் பாடக் கற்று, அதன் பிறகு இலக்கண இலக்கியங்களில் கைவைக்க வேண்டும் என்பது டி கே சி அவர்களின் வாதம்.



டி டி திருமலை

உலக இதய ஒலி ஆசிரியராக இருக்கும் நண்பர் டி டி திருமலை அவர்களைக் குற்றாலத்திற்கு அழைத்துச் சென்று டி கே சி யிடம் அறிமுகப்படுத்தினேன். பத்து நாட்கள் ரசிகமணியோடு நண்பர் திருமலை தங்கி உறவாடிய பிறகு " சத்தியத்தின் தரிசனத்தையே கண்டு கொண்டேன் " என்று பூரிப்போடு சொன்னார். அது முதற்கொண்டே நண்பர் திருமலை டி கே சி யின் அரிய பக்தராகவே மாறிவிட்டார். உலக இதய ஒலி என்ற பத்திரிக்கையை டி கே சி யின் உபதேசங்களை பிரச்சாரம் செய்வதற்காகவே அவர் தொடங்கினார் என்று சொன்னால் குற்றமில்லை.

-உலக இதய ஒலி - ரசிகமணி நூற்றாண்டு விழா மலர் வாழ்த்துக்களில் ஜஸ்டிஸ் மகராஜன் கூறியது.



சுஜாதா

எங்கள் இளவயதில் கம்பன் மேல் மிகுந்த ஈடுபாடு ஏற்படுவதற்கு டி.கே.சி. முக்கியக்காரணர். கம்பராமாயணத்தை அதன் பண்டிதத்தன்மை நிறைந்த விரிவுரைகளிலிருந்து விடுவித்தவர் டி.கே.சி.



மனுஷ்ய புத்திரன்

தமிழ் இலக்கிய ரசனை மரபில் ரசிகமணி டி .கே .சி யின் அடையாளம் என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடியது. பழந்தமிழ் இலக்கியத்தை அதன் வரலாற்றுப் புனைவுகளிருந்தும் நம்பிக்கைகளிருந்தும் மீட்டு தர்க்கரீதியாக மூலப்பிரதிகளை மீள்பார்வை செய்தவர் அவர். அந்த வகையில் தமிழில் மரபான பண்டித மனப்பான்மையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது டி.கே.சியின் மனம். அவரது கடிதங்களில் வெளிப்படும் உயர்ந்த இலக்கிய ரசனையும் கலாபூர்வமான வாழ்வியல் நோக்கும் டி.கே.சியின் ஆளுமையினை பன்முகத்தன்மை கொண்டதாக நம் கண்முன் கொண்டு வருகிறது .

சுந்தா

"செந்தமிழ்க் கொண்டல் அவர்
தில்லிக்கு வந்திருந்தார்;
வந்த கொண்டல் உருமாற்றி
வைத்திட்டார் இந்நகரை.

தமிழ் மாரி பெய்ததிலே
தில்லி எலாம் தமிழ் வெள்ளம்;
யமுனை நதி பொருநை என
இனம் மாறி ஓடியது.

இக்கரையில் தமிழ்ச் சோலை,
அக்கரையில் தமிழ்ச் சோலை;
இக்கரைக்கும் அக்கரைக்கும்
இணைந்தோடும் இசைத் தோணி.

கரையோர மண்டபத்தில்
கம்பர் கவி பாடுகிறார்;
உரைக்கின்றார் வள்ளுவனார்
ஓங்கியதோர் கோயிலிலே. "

டாக்டர்.ஆர்.எம். அழகப்பச்செட்டியார்

அழகை காண்பது ஒரு வகை ஆற்றல். அபூர்வமான ஒருவகை வாய்ப்பு. அது ஒரு வரப்பிரசாதம், ஆனால் டி.கே.சி அவர்களுக்கு அரிதான அந்த வரப்பிரசாதம் எளிதான பொழுது போக்காக வாய்த்துவிட்டது. அழகை தவிர வேறு எதையும் அவர்களுடைய கண் பார்க்காது. மேலும் பார்க்க தெரியாது.அழகுக்கு அஞ்சலி செய்வதில் அவர்களை மிஞ்சின பக்தரைக் காண்பது அரிது.

பெரியசாமி தூரன்

கவிதைக்கு ஒரு தனிப்பட்ட சக்தியிருக்கிறது; நீள நீளப் பேசி விவரிக்க முடியாத உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் நல்ல கவிதை ஒரு வரியிலே எப்படியோ அற்புதமாக வெளிப்படுத்தி விடுகிறது என்கிற உண்மையை டி.கே.சி நன்றாக எடுத்துக் காட்டினார். கவிதையின்

சொல் அழகு, சந்த அழகு எல்லாம் அவர் அதைப் பாடிக் காட்டும் போதே உணர்ச்சியோடு வெளிப்பட்டு விடும். கவிதையே தனக்கு விளக்கம் தெரிவித்துக் கொள்வது போல அமையும் அவர் பேச்சு.

ராஜா ஸர்.முத்தய்யா செட்டியார்

ரஸிகமணி அவர்கள் தமிழ்நாட்டு இலக்கியங்களை அனுபவிப்பதிலும், தாம் அனுபவித்த இன்பங்களைப் பிறருக்கு வெகு சுலபமான நடையில் எடுத்துக் காட்டி அவர்களை அனுபமிக்கச் செய்வதிலும் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். அன்பில் சிறந்த நண்பர். ரஸிகமணி அவர்களும், அவர்களுடைய மனைவியாரவர்களும் அவர்கள் இல்லத்தில் நண்பர்களுக்கு அளித்து வந்த உபசரிப்பை யாரும் மறக்க முடியாது. கடவுளிடத்தில் நம்பிக்கையுடன், தாம் எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதிலும், தம் கடமையைச் செய்வதிலும் ஒப்பற்றவர். தமிழின் ஆற்றலையும், அழகையும் சிறு குழந்தையும் அறியக்கூடிய தேனினும் இனிய சின்னஞ்சிறு சொற்களால் எடுத்து உணர்த்தக்கூடிய உத்தமர்

வள்ளி முத்தையா

அய்யாமேல் ஆசையாய் ஓடையிலே
    அழுகுப் பாமாலையோ உளக்கூடையிலே
கொய்து வந்தேன் வழிப் பாதையில் – அன்புக்
    கள்ளனும் மதுவுண்ட போதையிலே

ஒய்யாரப் புன்னகை மந்திரமே – எனை
    ஓயாமல் தினம் கட்டும் தந்திரமே
அய்யாவின் பொன்முகச் சந்திரனே
    அக வீதியில் ஒளிதனைச் சிந்திடுமே

சிதம்பரநாதச் சக்கரையே – இந்த
    சித்தெறும்பின் மேல்கொண்டாய் அக்கறையே
சிந்து தந்த பொதிகைச் சந்தனமே
    சின்ன பேத்தியும் செய்தேனே வந்தனமே

அண்ணன் மார்மூவரும் வைரமணி எந்தன்

அக்காளோ அழகான தங்கமணி
வள்ளிக்குறத்தியோர் பாசிமணி – எமை
வடிவாக இணைத்ததோ ரசிகமணி

முனைவர் ச.ஈஸ்வரன்

தமிழ் இசை இயக்கம் மற்றும் மறையும் நிலையிலும், ஒரு சாராருக்கே உரிய நிலையிலும் இருந்த "பரத நாட்டியக்கலைக்குப்" புத்துயிர் தந்து சிறப்புற வாழும்படி செய்த தொண்டு டி.கே.சியை சாரும்.

[டிகேசி பற்றி கி.ராஜநாராயணன்](https://tamil.wiki/wiki/%E0%AE%9F%E0%AE%BF.%E0%AE%95%E0%AF%87.%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%A4_%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A4%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D)

https://tamil.wiki/wiki/%E0%AE%9F%E0%AE%BF.%E0%AE%95%E0%AF%87.%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%A4_%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A4%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D

ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் (1881-1954) *ஒரு சிறந்த தமிழ் அறிஞர், வழக்கறிஞர், எழுத்தாளர் மற்றும் இலக்கியத் திறனாய்வு முன்னோடி ஆவார். குற்றாலத்தில் "வட்டத்தொட்டி" என்ற இலக்கிய அமைப்பை உருவாக்கி, கம்பராமாயணம் உள்ளிட்ட மரபிலக்கியங்களை ரசித்துப் பாடி, தமிழ் இலக்கிய வாசிப்பை ஓர் இயக்கமாக மாற்றியவர்.*

முக்கிய தகவல்கள்:

- **பிறப்பு:** 1881 *செப்டம்பர்* 11, *ஸ்ரீவில்லிபுத்தூர்* (*தென்காசி*).
- **சிறப்புப் பெயர்:** *ரசிகமணி டி.கே.சி.*
- **பணி:** *வழக்கறிஞராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கி, பின் இலக்கியத் துறையில் முழுமையாக ஈடுபட்டார்.*

- **இலக்கியப் பணி:** கம்பர் தரும் ராமாயணம், இதய ஒலி போன்ற நூல்களை எழுதியுள்ளார். கம்பராமாயணத்தில் உள்ள கம்பனின் கவிநயத்தை ரசித்து போற்றியவர்.
- **வட்டத்தொட்டி:** குற்றாலத்தில் தன் இல்லத்தில் "வட்டத்தொட்டி" என்ற அமைப்பின் மூலம், தமிழறிஞர்கள் மற்றும் ரசிகர்களைக் கூட்டி, மரபிலக்கியங்களைச் சுவைக்கச் செய்தார்.
- **மறைவு:** பிப்ரவரி 16, 1954.

டி.கே.சி அவர்களின் தமிழ் இலக்கியப் பணி, குறிப்பாகப் பழந்தமிழ் நூல்களின் மீதான ரசனை வாசிப்பு, தமிழ் இலக்கிய உலகில் புதிய பார்வையை உருவாக்கியது

டி கே சி

கடிதங்கள் (154 Pages)

https://www.tamilvu.org/library/nationalized/pdf/57-baskarathondaimaan.tho.mu/rasigamanit.k.c.yinkadithangal.pdf

இரசிகமணி **டி கே சிதம்பரநாத முதலியார்** [192 Pages]

https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZU3lZUy.TVA_BOK_0006298

பசுபதிவுகள்

https://s-pasupathy.blogspot.com/2020/03/8.html

1906. சின்ன அண்ணாமலை - 8

சின்ன அண்ணாமலை



[*நன்றி: தினமணி*]

ஒரு சமயம் காரைக்குடி கம்பன் திருநாளுக்குப் போய் இருந்தேன். **ஸ்ரீ டி.கே. சிதம்பரநாத முதலியார்** என்னும் பெரியார் வெகு அருமையாக எல்லாரும் ரசிக்கும்படி கவிதைகள் சொல்லுகிறார்கள் என்று ஏற்கெனவே நண்பர்கள் மூலம் கேள்விப்பட்டிருந்தேன். ஆனாலும் அதை நான் நம்பவில்லை.

"இது வெறும் புகழுரையாய்த்தான் இருக்க முடியும். கவிதைகளையாவது எல்லாரும் ரசிக்கும்படி சொல்லுவதாவது?' என்று எண்ணிக்கொண்டேன். ஸ்ரீ டி.கே.சி. அவர்கள் மேடைக்கு வந்தார்கள். எல்லோரும் அவரைக் கரகோஷம் செய்து வரவேற்றனர். சபையோர் செய்த கரகோஷத்தையும் ஆரவாரத்தையும் வரவேற்பையும் உற்சாகத்தையும் பார்த்தால் சாக்ஷாத் கம்பருக்கு நடந்த வரவேற்பாகவே காணப்பட்டது. டி.கே.சியினுடைய கம்பீரமான மீசையும் சாந்தம் தவழும் முகமும் என்னை மிகவும் வசீகரித்து விட்டன. அவர்கள் "மைக்'கின் முன் நின்ற நிலையும் எடுப்பான குரலும், பிரசங்க தோரணையும் என்னைப் பிரமிக்கச் செய்துவிட்டன. அன்று கம்பராமாயணத்திலிருந்து ஒரு முக்கியமான கட்டத்தை டி.கே.சி. அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். விசுவாமித்திரர் ஜனகனிடம் ராமனுடைய வீரச் செயலைப் பற்றிக் கூறும் கட்டம்.

""வரும் வழியில் ஒரு குன்று. அந்தக் குன்றைப் பற்றியும் அதில் வாழும் அரக்கியான தாடகையைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது திடீரென்று குன்றின் உச்சியில் தாடகை பயங்கரமான உருவத்தில் தோன்றினாள். குன்றின் சரிவில் இறங்கி நின்றுகொண்டு அவள் ஒரு சூலாயுதத்தை எடுத்து எங்கள் மேல் வேகமாக வீசினாள். ராமன் ஓர் அம்பை எய்து அந்தச் சூலாயுதத்தைச் சுக்குச் சுக்காக ஆக்கிவிட்டான். பிறகு பெரிய அம்பு ஒன்றை எடுத்து எய்தான். அது என்ன செய்தது? தன் கண்களில் கொல்லுலை போல அக்கினியைக் கொப்புளித்துக் கொண்டிருந்த தாடகையின் மார்பை ஊடுருவிப் போயிற்று.

அலை அலையாக மோதிக் கொண்டிருக்கும் நீலக் கடல் போல் சக்தியும் அற்புதமும் வாய்ந்தவனாய் இருக்கிறான் ராமன். ஜனகனைப் பார்த்து விசுவாமித்திரர் பேசுகிற பேச்சு இப்போது பாட்டைப் பார்க்கலாம்:

""

அலையுருவக் கடல் உருவத்(து)
ஆண்டகை தன் நீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை
நீ யுருவ நோக்கையா
உலையுருவக் கனல் உமிழ்கண்
தாடகை தன் உரம் உருவி--''

தாடகையின் மார்பை உருவிவிட்டு வேறு என்ன செய்தது அந்த அம்பு? அவளுக்குப் பின்னிருந்த மலையை உருவியது, பிறகு மலைக்குப் பின் பக்கத்தின் சரிவில் வளர்ந்து ஓங்கி நின்ற மரம் ஒன்றையும் உருவியது. தன் காரியங்களை இப்படியாக முடித்துக்கொண்டு அந்த அம்பு கடைசியில் மண்ணுக்குள் பாய்ந்தது. செய்யுள் முழுமையும் பார்ப்போம்:

அலையுருவக் கடல் உருவத்(து)
ஆண்டகை தன் நீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை
நீ யுருவ நோக்கையா!
உலையுருவக் கனல் உமிழ்கண்
தாடகை தன் உரம் உருவி
மலையுருவி மரம் உருவி
மண் உருவிற்(று) ஒருவாளி.

என்று பாட்டைப்பாடி முடித்தார்கள். ஒவ்வொரு வரியையும் நிதானமாக நிறுத்திப் பல தடவை சொன்னார்கள். அவர்கள் சொன்ன அந்தப் பாட்டிலுள்ள அம்பானது தாடகையின் (உரத்தை) மார்பை உருவியது. எல்லாம் அப்படியே கண் முன்னால் காட்சியளித்தது. ஆனால் ஸ்ரீ டி.கே.சி. அவர்களுடைய அழகிய பிரசங்கமோ முன்னாலிருந்த மைக்கை உருவியது. பின்னர் மின்சாரக் கயிறுகளை உருவியது. அப்புறம் எங்கள் இதயத்தை உருவி மனத்திலே பாய்ந்தது!

இப்படியாக ஓர் அதிசயமான காரியத்தை அன்று டி.கே.சி. செய்து விட்டார்கள். பாட்டு: அதிலும் கம்பன் பாட்டு எவ்வளவு சுலபமாகப் போய்விட்டது. அடடா என்ன எளிமை! இந்த எளிமை இத்தனை நாளாக நமக்குப் புலப்படாமல் போய்விட்டதே என்று ஒரே வருத்தமாகப் போய்விட்டது. அத்துடன் வியப்பும் ஆச்சரியமும் அதிசயமும் போட்டி போட்டுக் கொண்டு என்னைத் திக்கு முக்காடச்

செய்து விட்டன. அதிலிருந்து ரசிகமணி டி.கே.சி.யின் அடியார்களில் அடியேனும் ஒருவனாகிவிட்டேன்.

பிறகு இரண்டு மூன்று தினங்கள் காரைக்குடியிலேயே தங்கியிருந்து ஸ்ரீ டி.கே.சி.யின் பிரசங்கங்களைக் கேட்டு அனுபவித்தேன்.

கடைசி நாளன்று டி.கே.சி.யை நெருங்கி பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, ""தாங்கள் எழுதிய புத்தகம் ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டேன். அதற்கு ரசிகமணி அவர்கள் ""ஆம் "இதய ஒலி' என்ற புத்தகம் ஒன்றை நண்பர்கள் பிரசுரித்திருக்கிறார்கள்'' என்று சொன்னார்கள்.



உடனே எனக்கு அப்புத்தகத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. அப்போது எனக்கு பால்ய வயது. ஸ்ரீ டி.கே.சி. அவர்களின் புத்தகத்தை விலை கொடுத்து வாங்கும் வசதியற்றவனாயிருந்தேன். ஆயினும் எனக்கென்று ஒரு புத்தகம் இருக்க வேண்டும் என்ற ஆசைவிட்ட பாடில்லை.

நான் அப்போது காரைக்குடி **திரு. சா. கணேசன்** அவர்கள் வீட்டில் தங்கியிருந்தேன். அவரிடம் நிறையப் புத்தகங்கள் இருக்கின்ற விஷயம் எனக்கு ஏற்கெனவே தெரியும். எனவே, "இதயஒலி'யும் இருக்கத்தான் வேண்டும் என்று

எண்ணி அவரது புத்தக சாலையை சோதனை போட்டேன். என் முயற்சி வீண் போகவில்லை. "இதயஒலி' கிடைத்தது!

எனக்கு ஏற்பட் சந்தோஷத்தைச் சொல்லி முடியாது! ஒன்றிரண்டு பக்கம் வாசித்தேன். ஸ்ரீ டி.கே.சியே நேரில் வந்து நின்று கொண்டு முகத்தில் புன்னகை தவழப் பேசுவதுபோல் இருந்தது. அந்தப் புத்தகத்தைவிட்டு பிரிய மனம் வரவில்லை. வேறு புத்தகம் வாங்கவும் வசதி இல்லை. என்ன செய்யலாம்? வேறு என்ன இருக்கிறது செய்வதற்கு? மெதுவாகப் புத்தகத்தை எடுத்து ஒளித்துக் கொண்டு கம்பி நீட்டிவிட்டேன்! நேராகப் பஸ் ஸ்டாண்டிற்குப் போய் ஊரை அடைவதற்குள் என் பாடு வியர்த்து விறுவிறுத்துவிட்டது. வீட்டை அடைந்தவுடன் ஓர் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு புத்தகத்தை ஒரு முறை பிரித்துப் பார்த்தேன். அதன் அட்டையில்

"அருமை நண்பர்
சா. கணேசன் அவர்களுக்கு...
டி.கே.சி.'

என்று எழுதியிருந்தது. அந்தப் புத்தகத்துக்குடையவருடைய பெயரையும் ஒரு முறை வாசித்தேன். அதை அப்படியே வைத்திருந்தால் நம்ம குட்டு வெளிப்பட்டு விடும் என்று பயந்து மேற்படி எழுத்துக்களை மிகவும் கஷ்டப்பட்டு அழித்தேன், பிறகு அதன் மேல் ஒரு வெள்ளைத் தாளை ஒட்டி அதில் என் பெயரை கொட்டை எழுத்தில் எழுதிப் புத்தகத்தைச் சொந்தமாக்கிய பின்புதான் நிம்மதி உண்டாயிற்று.

அந்தப் புத்தகத்தை நான் எத்தனை தடவை படித்திருப்பேன் என்பதைக் கணக்கிடவே முடியாது!

"இதயஒலி' செய்த வேலையோ அபாரம் என்று சொல்லலாம். தமிழ்க் கவிதைகளை, படித்தவர்களும் பாமரர்களும் அநுபவிக்கலாம் என்று அது சொல்லித் தந்தது. உண்மைக் கவிதை எது, போலிக் கவிதை எது, என்பதையும் "இதயஒலி' எடுத்துக்காட்டிற்று.

கம்பன், கலிங்கத்துப் பரணி ஆசிரியர், மகாமகோபாத்யாய சாமிநாத ஐயர், வெள்ளக்கால் முதலியார், கவிமணி, பாரதியார், நந்திக் கலம்பகம் ஆசிரியர் பாலசரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியார், முத்தொள்ளாயிரம் ஆசிரியர் திருப்பாப்புலியூர் ஞானியார் சுவாமிகள், குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் முதலிய அனைவரையும் அறிமுகம் செய்து வைத்து அவர்களின் கவிதைகளை அநுபவிக்கும்படி "இதயஒலி' செய்தது.

"இதயஒலி'யில் உள்ள "சங்கீதமும் சாகித்யமும்' என்ற கட்டுரையைப் படித்த பிறகு உண்டான ஆவேசம்தான் என்னைத் தேவகோட்டையில் ஒரு தமிழிசை மாநாடு நடத்தும்படி தூண்டியது. தமிழிசைக் கிளர்ச்சிக்கே அந்தக் கட்டுரை தூண்டுகோலாகவும் அமைந்தது.

இப்படிப்பட்ட அற்புதமான காரியங்களைச் செய்த "இதயஒலி' யின் இரண்டாம் பதிப்பை வெளியிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

சொன்னால் நம்ப மாட்டீர்கள், இந்த இரண்டாம் பதிப்பை வெளியிடுவதற்காகத் திருத்திக் கொடுக்கப்பட்ட புத்தகம் நான் காரைக்குடி திரு. சா. கணேசன் அவர்கள் வீட்டிலிருந்து அமுக்கிக் கொண்டு வந்த அதே புத்தகம் என்பதுதான்.

"இதயஒலி'யைச் சொல்லாமல் எடுத்துக்கொண்டு வந்த குற்றத்திற்குப் பரிகாரமாக நானே ஆயிரக்கணக்கான புத்தகம் போட்டு விநியோகம் செய்யும்படி ஏற்பட்டது, எல்லாவற்றையும்விட அதிசயமான விஷயமாகும்.

[**நன்றி : தினமணி**]


S No.	Category	Title	Author	Publisher
1	டி கே சி எழுதிய நூல்	அற்புத ரஸம்	ரசிகமணி டி கே சி	புது மலர் நிலையம்
2	டி கே சி எழுதிய நூல்	இதய ஒலி	ரசிகமணி டி கே சி	புதுமைப் பதிப்பகம்
3	டி கே சி எழுதிய நூல்	கம்பர் யார்?	ரசிகமணி டி கே சி	பொதிகை மலைப் பதிப்பு
4	டி கே சி பதிப்பித்த நூல்	கம்பர் தரும் ராமாயணம் - பாகம் 1	ரசிகமணி டி கே சி	பொதிகை மலைப் பதிப்பு
5	டி கே சி பதிப்பித்த நூல்	கம்பர் தரும் ராமாயணம் - பாகம் 2	ரசிகமணி டி கே சி	பொதிகை மலைப் பதிப்பு
6	டி கே சி பதிப்பித்த நூல்	கம்பர் தரும் ராமாயணம் - பாகம் 3	ரசிகமணி டி கே சி	பொதிகை மலைப் பதிப்பு

7	டி கே சி பதிப்பித்த நூல்	முத்தொள்ளாயிரம்	ரசிகமணி டி கே சி	புதுமைப் பதிப்பகம்
8	டி கே சி பதிப்பித்த நூல்	தமிழிசைப் பாட்டுக்கள்	ரசிகமணி டி கே சி	புதுமைப் பதிப்பகம்
9	டி கே சி கட்டுரைகள்	தமிழ்க் களஞ்சியம்	ரசிகமணி டி கே சி	மகாகவி பாரதி அறநிலை
10	டி கே சி கடிதங்கள்	ரசிகமணி கடிதங்கள் - பாகம் 1	ரசிகமணி டி கே சி	உயிர்மெய் பதிப்பகம்
11	டி கே சி கடிதங்கள்	ரசிகமணி கடிதங்கள் - பாகம் 2	ரசிகமணி டி கே சி	உயிர்மெய் பதிப்பகம்
12	டி கே சி கடிதங்கள்	ரசிகமணி கடிதங்கள் - பாகம் 3	ரசிகமணி டி கே சி	உயிர்மெய் பதிப்பகம்
13	டி கே சி கடிதங்கள்	ரசிகமணியின் கடிதங்கள்	ரசிகமணி டி கே சி	தொ மு பாஸ்கரத் தொண்டைமான்
14	டி கே சி பற்றி பிறர் எழுதிய நூல்கள்	கம்பனும் TKC யும்	ரசிகமணி டி கே சி	தொ மு பாஸ்கரத் தொண்டைமான்
15	டி கே சி பற்றி பிறர் எழுதிய நூல்கள்	டி கே சி வரலாறு	வித்வான் ல.சண்முகசுந்தரம்	சாகித்ய அகாடமி
16	டி கே சி பற்றி பிறர் எழுதிய நூல்கள்	நான் கண்ட டி கே சி	எஸ் வி எஸ்	அமுத நிலையம்
17	டி கே சி பற்றி பிறர் எழுதிய நூல்கள்	அன்னப்பறவை	கி.ராஜநாராயணன்	அன்னம்
18	டி கே சி பற்றி பிறர் எழுதிய நூல்கள்	ரஸ ஞானி - டி கே சி	எஸ்.மகராஜன்	வானதி
19	டி கே சி பற்றி பிறர் எழுதிய நூல்கள்	ரசிகமணி டி கே சி	இரா.நரேந்திரகுமார்	ராசபாளையம் தமிழ்ச்சங்கம்

20	டி கே சி பற்றி பிறர் எழுதிய கட்டுரைகள்	டி கே சி	தொகுப்பு நூல்	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
21	டி கே சி பற்றி பிறர் எழுதிய கட்டுரைகள்	டி கே சி - பற்றிய ஆராய்ச்சி	எஸ்.ஈஸ்வரன்	கலைஞன் பதிப்பகம்
22		டி கே சி - Kalai, Ilakiya Panni பற்றிய ஆராய்ச்சி	எஸ்.ஈஸ்வரன்	
23	டி கே சி பற்றி எழுதிய கட்டுரைகள்	கவிதையும் ஆனந்தமும்	தீப. நடராஜன்	மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்
24		கல்கியில்வந்த கட்டுரை & கார்டூன் Yr. 1954		
25		நூற்றாண்டுவிழா Malar	டி டி திருமலை	
26		அரும்பியமுல்லை	தீபன்	பொதிகைமலைப் பதிப்பு
27		ரசிகமணியின் அமுத மொழிகள்	இரா.தீத்தாரப்பன் - ப.ராஜாராம்	
28		தீபன் நூற்றாண்டு விழா மலர்	என். நவநீத கிருஷ்ண ராஜா	நினைவுக் களஞ்சியம்
29	டி கே சி கடிதங்கள்	டி கே சி கடிதங்கள்		
30	டி கே சி கடிதங்கள்	கல்கி கடிதங்கள்	சுப்ர. பாலன்	வானதி பதிப்பகம்
31		ரசிகமணி ரசித்த பாடல்கள்	மரபின் மைந்தன் முத்தையா	விஜயா பதிப்பகம்
32		டைட்டானிக்கும் டி கே சி யும்	டாக்டர் பூவண்ணன்	திருவரசு புத்தகநிலையம்
33		ரசிகமணியின் கட்டுரைகள்		

34		எப்போ வருவாரோ	திருமதி வள்ளி முத்தையா	தோழமை வெளியீடு
35		பொன்னியின் புதல்வர்	சுந்தா	வானதி பதிப்பகம்
36		தடம் பதித்த மாமனிதன் ரசிகமணி டி கே சி	தி.சுபாஷிணி	மித்ரஸ் பதிப்பகம்
37		தமிழ் இசை பாடல்கள்		
38	டி கே சி கட்டுரைகள்	கட்டுரைக் களஞ்சியம்	ரசிகமணி டி கே சி	காவ்யா
39	டி கே சி பற்றி பிறர் எழுதிய நூல்கள்	டி கே சி வரலாறு	வித்வான் ல.சண்முகசுந்தரம்	ஸ்டார்
40	டி கே சி பற்றி பிறர் எழுதிய கட்டுரைகள்	ரசிகமணி ரசனைத்தடம்	தொகுப்பு நூல்	காவ்யா பதிப்பகம்

https://www.keetru.com/kathaisolli/feb07/natarajan.php



தமிழ் செய்த பாக்கியம்

தீப. நடராஜன்

“பூரண ஹரியும் பூரண ரசிகமணியும்” என்ற தலைப்பில் 1967ம் ஆண்டு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.

“சென்ற திங்கட்கிழமை கண்ணன் பிறந்த நாள். அந்தத் திங்கட்கிழமையே தமிழ்க் கவிதை தரும் மகிழ்ச்சியின் ரகசியம். தமிழ் வசன நடை முன்னேற்றத்தின் ரகசியம். தாளமும், ராகமும் சேர்ந்த நல்லிசையின் ரகசியம். தெய்வ பக்தி தரும் நிம்மதியின் ரகசியம். அன்பின் பரம மகிழ்ச்சி, வேஷங்களின் பொய்ம்மை, அனைத்தும் நன்றாகக் கண்ட பூரண ரசிகமணி டி.கே.சி. பிறந்த நாளாகும்.

“ஹரியின் பூரணாவதார கண்ணனின் ஜன்ம நட்சத்திரமும், டி.கே.சி.யின் ஜன்ம நட்சத்திரமும் ஒன்றாய்ச் சேர்ந்த திருவிழாவை மகிழ்ச்சியுடன் சென்ற திங்கட்கிழமை கொண்டாடினோம். இந்த திருவிழாக்கள் ஞானமும் அன்பும் நாட்டில் வளரச் செய்யும்.

கண்ணபகவான் ரோஹிணி நட்சத்திரத்தில் அவதரித்தான். ரோஹிணி நட்சத்திரக் கூட்டம் சகடத்தைப் போல் இருப்பதாகக் கண்டு அதற்குப் பெயரும் சகடம் என்றே சொல்லுவது வழக்கம். வண்டியின் முக்கிய பாகம் அச்சுமரம். அச்சுமரத்துக்கு வடமொழி அக்ஷி. அதன் கீழ் பிறந்தான் கண்ணன் என்று விஷ்ணுவுக்குப் பீஷ்மாச்சாரியார் தந்து பாடிய ஆயிர நாமங்களில் அதோகக்ஷஜ என்பதும் ஒன்று. அதாவது அச்சு மரத்தடியில் அவதரித்தான் என்று.

இந்த அச்சு மரத்தடியில் மற்றொருவர் அவதரித்தார். தமிழ்க் கவிக் காதலர் டி.கே.சி என்று பெயரைப் பெற்ற மகான் சிதம்பரநாத முதலியார் அவர்கள். சிரீஜயந்தி என்றால் கண்ணன் பிறந்த நாள். டி.கே.சி. பிறந்த நாள் என்றும் தமிழர் கொண்டாடும் நாள்.” மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மிக மிகக் குறைந்த வார்த்தைகளில், ரத்னச் சுருக்கமாக டி.கே.சி.யின் விஸ்வரூபத்தை நமக்குக் காட்சியாகக் காட்டிவிட்டார். இதற்கு மேல் சொல்லுவதற்கு ஒன்றுமே இல்லைதான்.

இருப்பினும் ஒரு சில சிந்தனைகளை இந்தக் கட்டுரையில் பகிர்ந்துகொள்வது எனது கடமை என நான் நினைக்கிறேன். தமிழர்களாகிய நாம் பாக்கியசாலிகள் என்று ஊக்கமூட்டியவர் ரசிகமணி டி.கே.சி. அதனை ஒட்டி தமிழ் செய்த பாக்கியம் டி.கே.சி.யின் அவதாரம் என்று தமிழர்கள் பெருமைப்படலாம்.

தமிழ் மொழிக்கும், தமிழ்க் கவிதைக்கும், தமிழின் மறுமலர்ச்சிக்கும், தமிழர் பண்பாட்டிற்கும், தமிழ் இசைக்கும் ரசிகமணி அவர்களால்தான் ஏற்றம் ஏற்பட்டது என்பதும் உண்மை. தமிழ்க் கவிதையை இன்பம் காண்பது எப்படி, கவிதையை அனுபவிப்பது எப்படி, கவிதை மூலம் எப்படி ஆனந்தம் அடையலாம் என்றெல்லாம் தமிழர்களுக்குச் சொல்லிக்கொடுத்தவர் டி.கே.சி.

ரசிகமணி தமிழ் இலக்கிய உலகில் தோன்றுவதற்கு முன்பு கவிதை என்பது வேறு, செய்யுள் என்பது வேறு என்பதை யாரும் பிரித்துப் பார்த்தது இல்லை.

பாடலின் பொருள் நயத்தை மட்டும் விளக்கிக் கொண்டிருந்தனரே அல்லாமல் உட்பொருள் கவி உருவம் பெற்று வெளிவந்துள்ள அற்புதத்தைக் கண்டவர் யாரும் டி.கே.சிக்கு முன்னர் இருந்ததாகத் தெரியவில்லை.

கவிதையை அனுபவித்தவர் மட்டுமல்ல டி.கே.சி. கலையை, இசையை, பண்பாட்டை, வாழ்க்கையை என்று இப்படி எல்லாத் துறைகளிலும் அவர் தனித்துவத்தோடு அனுபவம் பெற்றவர்; விளக்கமளித்து தமிழ் மக்களுக்கு உதவியவர்.

ரசனை முறைத் திறனாய்வாளர் என்று ரசிகமணியைச் சிலர் சிறப்பித்துக் கூறுவர்.

கலை, இலக்கியம், இசை, வாழ்க்கை முறை எல்லாவற்றிலும் அந்தத் திறனாய்ந்து தெளிவு பெறும் நிலையை டி.கே.சி.யிடம் காண முடியும். பழைய இலக்கியம் என்னும் ஒரே காரணத்திற்காக எல்லாவற்றையும் அவர் ஏற்றுக்கொண்டது கிடையாது. அதே போன்று கவித்துவம் இல்லாத கவிகளையும், அவர் தயவு தாட்சண்யம் இன்றி ஒதுக்கித் தள்ளிவிட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

டி.கே.சி. அவர்கள் ஏற்றுக்கொண்ட கவிஞர்களுள் ஸ்ரீவில்லிபுத்தூர் கவிஞர்களான பெரியாழ்வார். ஆண்டாள் இருவரும் அடங்குவர். ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் ரசிகமணி டி.கே.சி. அவர்களுக்கும் உள்ள தொடர்புகள், செய்திகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது ஸ்ரீ ஆண்டாள் திருக்கோவிலின் கோபுரம் சம்பந்தமானது.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது தமிழக அரசுக்கு ஏற்ற இளச்சினை ஒன்றை வடிவமைக்கத் திட்டமிட்டனர். பலரும் பல்வேறு யோசனைகளைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். முடிவுக்கு வர இயலவில்லை அரசினரால்.

ரசிகமணி டி.கே.சி. அவர்களிடம் ஓமந்தூரார் யோசனை கேட்டார். “இதற்கா இவ்வளவு யோசனை? தமிழ்நாடு முழுவதும் வானளாவிய கோபுரங்கள் எழுந்து நிற்கின்றனவே. அதைவிடவா தமிழ்க் கலையையும், தமிழ்ப் பண்பாட்டையும் எடுத்துக் காட்டும் சின்னம் வேறு இருக்கிறது? நம் ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் மிகவும் அழகான தோற்றத்துடன் இருக்கிறது. அதையே தமிழக அரசின் சின்னமாக வைத்துவிடலாமே” என்று உடனே பதில் சொல்லிவிட்டார் ரசிகமணி.

டி.கே.சி. அவர்களின் இந்த அரிய யோசனை ஏற்கப்பட்டு தமிழ்நாட்டின் சின்னமாக ஸ்ரீவில்லிபுத்தூரின் கோபுரம் இடம்பெற்றுவிட்டது.

கோதை பிறந்த புனிதத் தலமான ஸ்ரீவில்லிபுத்தூரில் கொல்லம் ஆண்டு 1057 ஆவணி மாதம் ரோஹிணி நட்சத்திரத்தில் (18.08.1881) தமிழ் செய்த தவப்பயனாக அவதரித்தார்கள் ரசிகமணி டி.கே.சி. என்ற குறிப்பைப் பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

டி.கே.சி.யின் தாயார் பிறந்த ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர். ரசிகமணி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் பிச்சம்மாள் அண்ணி பிறந்த ஊரும் இதே ஸ்ரீவில்லிபுத்தூர்தான். தம் மாமன்மார் மற்றும் உறவினர் வாழும் ஊர் என்பதாலும் டி.கே.சி. அவர்களுக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் மனத்துக்குப் பிடித்த ஊராக இருந்து வந்தது.

ராஜாஜி அவர்கள் சிரீஜயந்தி என்றே எழுதியிருக்கிறார். அதுபோல டி.கே.சி. அவர்களும் ஸ்ரீவில்லிபுத்தூர் என்றுதான் எழுதியிருக்கிறார். அப்படியேதான் ஸ்ரீரங்கம் என்றும் எழுதினார். பெரியவர்களின் தனித்துவமான சிந்தனைகளும், பழக்க வழக்கங்களும் எண்ணிப் பார்த்து மகிழலாம் நாம்.

1948-ஆம் ஆண்டில் (ஜஸ்டிஸ்) எஸ். மகராஜன் அவர்கள் அங்கு ஜில்லா முனிசீபாகப் பதவி வகித்தபோது டி.கே.சி. அவர்களுக்கு ஸ்ரீவில்லிபுத்தூருடன் அதிகமான நெருக்கமும், ஈர்ப்பும் ஏற்பட்டது.

மகராஜன் அவர்கள் ரசிகமணி அவர்களின் சீடர்களில் மிகவும் முக்கியமானவராக இருந்தவர். தம் கருத்துக்களோடு இணைந்து சிந்திக்கும் ஆற்றல் மிக்கவராக மகராஜன் இருக்கிறார் என்பதால் ரசிகமணி அவர்களுக்கு மகராஜன் அவர்களிடம் ஒரு நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் இருந்து வந்தது.

வாய்ப்பு நேரும்போதெல்லாம் மகராஜன் அவர்களுடன் சில தினங்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் தங்குவதையும், தமிழ்க் கவிதையை அவரோடு சேர்ந்து அனுபவிப்பதையும் டி.கே.சி. அவர்கள் வழக்கப்படுத்திக் கொண்டார். அந்த சந்திப்புகள் எல்லாம் ரசிகமணி வாழ்க்கையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஆகும்.

அவ்வாறு ஸ்ரீவில்லிபுத்தூரில் டி.கே.சி. தங்கியிருந்த சமயங்களில் அங்குள்ள பென்னிங்டன் நூலகம், புனித இருதயப் பள்ளிக்கூடம், காஸ்மோபாலிடன் கிளப் போன்ற அமைப்புகளில் டி.கே.சி. அவர்களைப் பேசுவதற்கு ஏற்பாடு செய்து மகிழ்ந்தார் மகராஜன் அவர்கள்.

டி.கே.சி. அவர்களின் கவிதானுபவத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் இலக்கிய அன்பர்கள் தோய்ந்து இன்புற்றனர். அவர்களில் ஒரே பெயரை உடையவர்கள் இருவர். ஒருவர் வித்வான் திருமலை அய்யங்கார். மற்றவர் திரு ஜி.ஞி. திருமலை அவர்கள்.

ஒரு கடிதத்தில் வித்வான் திருமலை அய்யங்கார் அவர்களின் தமிழ் ஈடுபாட்டைக் குறித்து டி.கே.சி எழுதியிருப்பதைப் பார்ப்போம்.

“திருமலை ஐயங்கார் அவர்கள் என்னுடன் திருச்சி வரை வந்தார்கள். விருதுநகர் வரை கம்பார்ட்மெண்டிலேயே இருந்து தமிழைக் கிறுக்கன் மாதிரி அனுபவித்து வந்தார்கள்” என்று குறிப்பிட்டு தமது மகிழ்ச்சியைக் காட்டியுள்ளார் டி.கே.சி.

மற்றவரான திரு. ஜி.ஞி. திருமலை அவர்கள் ரசிகமணியின் மேன்மைகளை எல்லாம் நன்கு உணர்ந்து போற்றிய சீடராக உருமாறியவர். மதுரைக்கும் பின்பு சென்னைக்கும் இடம்பெயர்ந்து சென்று காந்தியத் தொண்டாற்றி பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்தவர்.

டி.கே.சியின் கோட்பாடுகளில் தம்மை முழுவதும் கரைத்துக்கொண்டு, ரசிகமணியின் கருத்துக்களையும், இலக்கியப் பார்வையையும்

எடுத்துக்காட்டுவதற்காக உலக இதய ஒலி என்ற மாத இதழைப் பல ஆண்டுகள் நடத்தித் தமிழ்த் தொண்டு ஆற்றிய ரசிகர் திரு. ஜி.ஞ்ரி. திருமலை அவர்கள்.

ரசிகமணி டி.கே.சி. வாழ்க்கை வரலாற்றில் ஸ்ரீவில்லிபுத்தூர் ரயில் நிலையம் முக்கியமான அங்கம் வகிக்கிறது. ரசிகமணி அவர்கள் தமிழ்க் கவிதையை ரசிப்பது ஒன்றையே ஒரு நியமமாகக் கொண்டிருந்த மகான் கவிதானுபவம் என்பதுவே அவரது உயிர் மூச்சாக இருந்திருக்கிறது என்று சொல்லுவார்கள் அவரோடு நெருங்கிப் பழகியவர்கள்.

கவிதா ரசனையில் ஆனந்தம் துய்த்தவர் ரசிகமணி. அதைவிட பிறரும் தம்முடன் சேர்ந்து கவிதையை ரசிக்கிறார்களே என்கின்றபோது அவருக்கு ஏற்படும் ஆனந்தமும், நிறைவும் தனி என்பதைப் பார்த்திருக்கிறோம்.

சென்னைக்கு ரயிலில் செல்லும்போதெல்லாம் ஸ்ரீவில்லிபுத்தூர் ரயிலடியில் வண்டி நிற்கும் சில மணித்துணிகளில் அன்பர்களைச் சந்திக்க அவர்கள் உள்ளம் துடிக்கும். மகராஜன், திருமலை போன்றோரைக் கண்டதும் முகம் மலரும் தோற்றம் காண்பதற்கு அரிய காட்சிதான். அந்த ரசிகர்களின் அன்பும் ஈடுபாடும் ரசிகமணி அவர்களின் உள்ளத்தை உருக்கிற்று.

இப்பேர்ப்பட்ட ரயிலடிச் சந்திப்புக்கள் டி.கே.சி. அவர்களுக்கு எத்தகைய உணர்வைக் கொடுத்தது என்பதை அவர்கள் வாக்குமூலம் மூலமே நாம் தெரிந்துகொள்வோம்.

வயசாக வயசாக ஒத்த உணர்ச்சி ஒன்று போதும். வேறொன்றுமே வேண்டாம் என்று சொல்லத் தோன்றுகிறது. சாப்பாடுகூட வேண்டாமோ என்று தோன்றியது வள்ளுவருக்கு.

டாக்டர் ஜான்ஸன் என்ற ஆசிரியருக்கும் அப்படித்தான் தோன்றியது. அவர் நல்ல மேதாவிகளான சத்சங்கத்தோடு தினம் தினம் பழகி வந்தார். ஒரு நாள் ஒருவர் அவரைக் கேட்டார். அயல்நாடுகளுக்குப் போய்ச் சுற்றுப் பயணம்செய்து வந்தால் அறிவு தெளிவடையும் அல்லவா என்று கேட்டார்.

அதற்கு ஜான்ஸன் பதில் சொன்னார்: அதெல்லாம் ஒன்றுமில்லை. பலர் பிரயாணம் பண்ணத்தான் செய்கிறார்கள். அவர்கள் கருத்துக்களையோ கொள்கைகளையோ மாற்றுகிறார்களோ, கிடையவே கிடையாது. அவர்கள் மாற்றுவதெல்லாம் நாணயத்தைத்தான். பிரான்ஸ§க்குப் போனால் பிரெஞ்சு நாணயமாக இங்கிலீஷ் நாணயத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். ஜெர்மனிக்குப் போகும்போது ஜெர்மன் நாணயமாக மாற்றிக்கொள்வார்கள். அவ்வளவுதான் என்றார் ஜான்ஸன்.

நல்ல சத்சங்கம் இருந்துவிட்டால் போதும். வேறு எங்கும் போக வேண்டும் என்று தோன்றாது. ஏன், தேவேந்திரலோகத்துக்குப் போகவே தோன்றாதாம்.

“தவலரும் தொல்கேள்வித்
தன்மை யுடையார்
இகல் இலர் எஃகுடையார்,
தம்முட் குழீஇ
நகலின் இனிதாயின்
காண்பாம் அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி”

- ரொம்பவும் உண்மை. இவ்வளவும் ஸ்ரீவில்லிபுத்தூரைப் பற்றிய விஷயம் என்பது ஞாபகம் இருக்க வேண்டும், இருக்கட்டும்.

இப்படி ஸ்ரீவில்லிபுத்தூருக்கும், டி.கே.சி. அவர்களுக்கும் உள்ள உறவு இருந்திருக்கிறது. இதை எண்ணிப் பார்க்கும்போது நமக்கும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஊர் பேரில் ஒரு தனி அபிமானம் தோன்றுகிறது அல்லவா?

KAMBAN TAMIL ACADEMY

https://arunankapilan.wixsite.com/kambantamilcentre/academy

- Tamil Savant Late Kamban Adippodi Saw.Ganesan founded Kamban Academy in 1939 to propagate the greatness of Tamil Poet Kavichakravarthi Kamban and his Tamil work “Ramavatharam” (known as Kamba Ramayanam).To achieve this he started celebrating Kamban Thirunal (Festival) annually at Karaikudi for three days and at the Samadhi of Kamban at Nattarasankottai (about 30 kms away from Karaikudi) on the fourth day. Rasikamani T K C inaugurated the festival in 1939 and from then on he celebrated it till his life time (1982) for 44 years continuously. From 1983 the mantle was passed on his senior disciple Kamban Adisoodi Pala Palaniappan as per the wish of the founder. Kamban Adisoodi continues the celebration for the past 30 years. A weeklong Platinum Jubilee (75th year) Kamban Festival will be celebrated from March 21 to March 27, 2013 in a grand manner.

• This is the only literary association celebrating the Platinum Jubilee by conducting annual festival during particular days every year without any break. • Kamban Adippodi built a traditional six sided (shatkona) stone temple for the Goddess of Tamil language along with statutes for Tholkappiar, Agaththyar, Thiruvalluvar, Ilango Adikal, Kambar, Oliththai and Variththai.

Sirpa Guru Dr V Ganapathi Sthapathi helped saw Ganesan in crystallizing the idols. This is the one and the only temple, in the world, built for Goddess of a Language.

• He also brought out, with the help of his friend Murray S Rajam and a few other scholars,the complete text of Kamba Ramayanam, with a separate book for each canto,after extensive and deligent analysis of old editions and ancient palm leaf manuscripts.The poems were printed with each word spelt separately so that they could be read and understood by ordinary people.

• Two endowment research lectures are being held every year in January and June in Kamba Ramayana and they are brought out in the same year in book form.

• Oratorical and essay competitions are also conducted for college students all over Tamilnadu in Kamba Ramayanam and Thirukkural and the prize awarded students are trained and given chances to speak in the Kamban Festival, thereby creating a second line of scholars.

• Literary Meeting is conducted every month on the evening of the first Saturday with an eminent speaker and one such young orator.

• Arrangements are being made to compile a research oriented library for Tamil Literature to facilitate research scholars and to start a school of scholar students encouraging post graduate students and public in the study of Tamil Literature study.


• As a part of these attempts, international conferences will be held once in two years commencing from the ensuing 2013 conference and literary workshops in between years.

பசுபதிவுகள்

https://s-pasupathy.blogspot.com/2016/09/2.html

வட்டத்தொட்டி நாயகர் ரசிகமணி டி.கே.சி.

வி. குமாரமுருகன்



செப்டம்பர் 11. ரசிகமணி டி.கே.சி யின் பிறந்த நாள்.
2012 -இல் தினமணியில் வந்த கட்டுரை இதோ!

தமிழகத்தில் ஒரே ஆண்டில் பிறந்த இருவரில் ஒருவர் உணர்ச்சிக் கவிதைகளை உருவாக்குவதில் வல்லவராகத் திகழ்ந்தார். மற்றொருவர் கலைகளை ரசிப்பதிலும், அவற்றை வளர்ப்பதிலும் சிறந்தவராக விளங்கினார்.

ஆம், 1882-ம் ஆண்டில் பிறந்த அவர்களில் ஒருவர் எட்டையபுரம் தந்த சுப்பிரமணிய பாரதி. மற்றொருவர் ரசிகமணி என அழைக்கப்படும் டி.கே. சிதம்பரநாத முதலியார். பாரதியைவிட 4 மாதங்கள் வயதில் மூத்தவர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தீத்தாரப்ப முதலியார்-மீனம்மாள் அண்ணி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார் டி.கே.சி. தென்காசியில் திண்ணைப் பள்ளியில் பயின்ற இவர், பின்னர் திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளியில் பயின்றார்.

பின்னர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் 1905-ம் ஆண்டில் சேர்ந்து பயின்றார். கல்லூரிக் காலத்திலேயே தமிழ் மேல் பற்றுக்கொண்டு திருக்குறள், பெரியபுராணம், காஞ்சிப்புராணம் உள்ளிட்ட நூல்களைக் கற்று அதுகுறித்து மாணவர்களிடம்

எடுத்துரைக்கும் பழக்கத்தையும் டி.கே.சி. வைத்திருந்தார். 1908-ம் ஆண்டு பிச்சம்மாள் அண்ணியைத் திருமணம் செய்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார்.

வழக்கறிஞராகப் பதிவு செய்திருந்தாலும், அப் பணியைத் தொடராமல் தமிழுக்காகவே வாழ்ந்த டி.கே.சி. திருநெல்வேலியில் 1924-ம் ஆண்டு "இலக்கியச் சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கினார். இந்த அமைப்புத்தான் பிற்காலத்தில் "வட்டத்தொட்டி' எனப் பெயர் பெற்றது.

இந்த வட்டத்தொட்டி இலக்கிய அமைப்பு 1924-ல் இருந்து 1927 வரையும், பின்னர் 1935-ல் இருந்து சில ஆண்டுகளும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது.


இந்த அமைப்புக்கு வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், எஸ். வையாபுரிப் பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, சக்கரபாணி நம்பியார், வித்வான் அருணாசலக் கவுண்டர், பி.ஸ்ரீ. ஆச்சார்யா, மீ.ப. சோமு, தொ.மு. பாஸ்கரத்தொண்டைமான், ஆ. சீனிவாசராகவன் உள்ளிட்ட அறிஞர்கள் நிரந்தரமாக வரும் பழக்கம் உடையோராக இருந்திருக்கின்றனர்.

ராஜாஜி, கல்கி கிருஷ்ணமூர்த்தி, அப்புசாமி ஐயர், பாலசுப்பிரமணிய ஐயர் உள்ளிட்டோர் வட்டத்தொட்டிக்கு அவ்வப்போது வந்து கலந்துகொள்வோரில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழால் அறிவியல் மட்டுமன்றி அனைத்துக் கலைகளையும், இயல்களையும் கற்க முடியும் என முழக்கமிட்ட டி.கே.சி. தமிழ்க் கவிதையில் மறைந்து கிடந்த கருத்துகளை எல்லாம் வெளிக்கொணர்ந்த காரணத்தால் "ரசிகமணி' என பெயர் சூட்டி அவரைத் தமிழுலகம் பாராட்டியது.

இலக்கியம் கூறுவதை நயம்பட விளக்கும் தன்மையுடைய டி.கே.சி.யால் தமிழின் சுவையை உணர்ந்தவர்கள் ஏராளம். உரைநடை மட்டுமல்லாது, கடிதங்கள் மூலமும் தமிழை உணர

வைத்தவர் டி.கே.சி. கடிதத்தின் வாயிலாக தமிழ்க்கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழிசை உள்ளிட்டவற்றை வளர்த்தவர் அவர். "கடித இலக்கியம்' என்ற புதிய இலக்கியச் சுவையை அறிமுகப்படுத்தியவர்.



தமிழை முழுமையாக அனுபவித்த டி.கே.சி. தேவகோட்டையில் 1941-ம் ஆண்டு நடைபெற்ற தமிழிசை மாநாட்டில் தலைமையேற்று தமிழிசையின் மேன்மையை எடுத்துரைத்தார். இவ்வாறு அனைத்துக் கலைக்கும் தொண்டாற்றிய டி.கே.சி. 1927-ம் ஆண்டு சென்னை மேல்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கும் அவர் சங்கத்தமிழ் குறித்து முழக்கமிட்டார். 1930 முதல் 1935 வரை சென்னை மாகாண இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆணையராகப் பணியாற்றிய அவர், கோயில்களில் தமிழ்நாட்டு பழங்கலைகளை நிகழ்த்தி அக் கலைகளைச் செழிக்கச் செய்தார்.

இதய ஒலி, கம்பர் யார் உள்ளிட்ட அவரின் நூல்களும், முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் ஆகிய பதிப்புகளும் டி.கே.சி.யின் சிறப்பைத் தெளிவுபடுத்தும். வட்டத்தொட்டி நாயகர், வளர்தமிழ் ஆர்வலர், ரசிகமணி, குற்றால முனிவர் எனப் பல்வேறு பெயர் பெற்ற டி.கே. சிதம்பரநாத முதலியார் 1954-ம் ஆண்டு மறைந்தார்.


அவர் மறைந்தாலும் அவரது பணியை மறக்காது இன்றளவும் திருநெல்வேலி பகுதியில் ரசிகமணிக்கு விழா நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அதேபோல இவ்வாண்டும் (வெள்ளிக்கிழமை

செப். 11) திருநெல்வேலி மாவட்டம், மேலகரத்தில் இவரது பிறந்த நாள் விழா கொண்டாடப்படுகிறது.

ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் (டி.கே.சி) **கம்பர் தரும் ராமாயணம்** (மூன்று பாகங்கள்) மற்றும் **முத்தொள்ளாயிரம்** ஆகிய நூல்களுக்கு உரை மற்றும் பதிப்புரை எழுதியுள்ளார். கம்பராமாயணத்தில் உள்ள சிறந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்து, அதன் சுவையை விளக்கும் வகையில் 'கம்பர் தரும் ராமாயணம்' என்ற நூலை அவர் உருவாக்கியுள்ளார்.

டி.கே.சி. தொடர்பான முக்கிய விவரங்கள்:

- **படைப்புகள்:** 'இதய ஒலி' (1941), 'கம்பர் யார்?'.
- **பதிப்பித்த நூல்கள்:** கம்பர் தரும் ராமாயணம், முத்தொள்ளாயிரம்.
- **சிறப்பு:** 'வட்டத்தொட்டி' இலக்கிய முற்றம் மூலம் தமிழ் இலக்கியத் திறனாய்வை வளர்த்தவர்.



ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் (TKC) அவர்களால் தொகுக்கப்பட்டு, கம்பராமாயணத்தின் சிறந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்து, எளிய உரைவிளக்கத்துடன் வெளியிடப்பட்ட நூல் "**கம்பர் தரும் ராமாயணம்**". இது கம்பரின் கவிநயத்தை வாசகர்கள்

எளிதில் உணரும் வகையில், காவியத்தின் சாரத்தை மட்டும் கொண்டு 1000க்கும் மேற்பட்ட பக்கங்களில் அமையப்பெற்ற புகழ்பெற்ற பதிப்பாகும்.

கம்பர் தரும் ராமாயணம் (TKC) - சிறப்பம்சங்கள்:

- **தேர்ந்தெடுத்த பாடல்கள்:** கம்பராமாயணத்தின் பல்லாயிரக்கணக்கான பாடல்களில், மிகச்சிறந்த மற்றும் உணர்ச்சிப்பூர்வமான பாடல்களை மட்டும் டி.கே.சி தேர்ந்தெடுத்துள்ளார்.
- **ரசிகமணி உரை:** டி.கே.சி-யின் சுவைநயமிக்க உரை, பாடல்களின் ஆழமான பொருளையும் கவித்துவத்தையும் புரியவைக்கிறது.
- **பொதிகை மலைப் பதிப்பு:** இது பெரும்பாலும் தென்காசி பொதிகை மலைப் பதிப்பகம் அல்லது அலையன்ஸ் கம்பெனி மூலம் வெளியிடப்பட்டுள்ளது.
- **முழுமையான காவியம்:** ஆரணிய, கிஷ்கிந்தா, யுத்த காண்டம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கிய, கம்பனின் கவித்திறனைப் போற்றும் நூல்.

இந்த நூல் தமிழ் இலக்கியத்தில் கம்பராமாயணத்தை சாதாரண வாசகர்களுக்கும் கொண்டு சேர்த்ததில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் (டி.கே.சி) கம்பராமாயணத்தை மக்களிடம் கொண்டு சேர்த்ததில் முக்கியப் பங்காற்றியவர். அவரது முக்கியப் படைப்புகள் மற்றும் பதிப்பித்த நூல்கள்: 'கம்பர் தரும் இராமாயணம்' (1 & 2), 'கம்பர் யார்?', 'ரசிகமணி டி.கே.சி. கடிதங்கள்', மற்றும் 'தமிழ்க் களஞ்சியம்'. இவை கம்பரின் கவிநயத்தை ரசித்து போற்றும் வகையில் அமைந்தவை.

ரசிகமணி டி.கே.சி அவர்களின் முக்கிய புத்தகங்கள்:

- **கம்பர் தரும் இராமாயணம் (பாகம் 1 & 2):** இது டி.கே.சி கம்பராமாயணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களுக்கு உரை மற்றும் விமர்சனம் எழுதிய மிக முக்கியமான நூலாகும்.
- **கம்பர் யார்?:** கம்பரைப் பற்றியும், அவரின் கவித்திறன் பற்றியும் எழுதிய விமர்சன நூல்.
- **ரசிகமணி டி.கே.சி. கடிதங்கள்:** டி.கே.சி தன் நண்பர்கள் மற்றும் அறிஞர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு, இது அவரது இலக்கிய ரசனையை உணர்த்துகிறது.
- **தமிழ்க் களஞ்சியம்:** தமிழ் இலக்கியத்தின் சிறப்புகளைப் பேசும் தொகுப்பு.

- **வட்டத்தொட்டி:** இவரது இல்லத்தில் நடைபெற்ற இலக்கியக் கூட்டங்களின் தொகுப்பு (இது தொ.மு.பாஸ்கரத் தொண்டைமானால் தொகுக்கப்பட்டது).

டி.கே.சி-யை பற்றி மற்றவர்கள் எழுதிய புத்தகங்கள்:

- **ரஸிகமணி டி. கே. சி:** தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எழுதியது.
- **தடம் பதித்த மாமனிதன் ரசிகமணி டி.கே.சி..**

இவரது நூல்களை பெரும்பாலும் நிவேதிதா பதிப்பகம் மற்றும் பொதிகை மலைப் பதிப்பகம் வெளியிட்டுள்ளன.

காணொளிகள்

01] **Rasikamani T.K.C | தீப. நடராஜன் - தொண்டர்தம் பெருமை | ராஜாராம் | சிகமணி டி.கே.சி. பிறந்த நாள் விழா**
https://www.youtube.com/watch?v=1mdrjOz4vnQ [32:21]

02] **Rasikamani T.K.C | ரசிகமணியின் கட்டுரைக் களஞ்சியம் | ரசிகமணி டிகேசி, Gandhi Study Centre**
https://www.youtube.com/watch?v=RmFpYm2vnNA [1:06:00]

03] **ரசிகமணி டி கே சி - TKC Rasigamani திரு. தி. விப்ரநாராயணன்**
https://www.youtube.com/watch?v=FULRueL09UA [15:11]

04] **Villu Paatu | வில்லுப்பாட்டு | Rasikamani T.K.C 138 birth Day | ரசிகமணி டி.கே.சி 138 வது விழா**
https://www.youtube.com/watch?v=iTPMbAYUi-I [30:28]

05] **ரசிகமணி போற்றிய பெண்மை, ரசிகமணி டி கே சி - முனைவர் ந.கவிதா, எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை**
https://www.youtube.com/watch?v=OT11SDqPbsM [22:40]

06] **டி.கே.சிதம்பரநாதர் பற்றிய முழு குறிப்பு**
https://www.youtube.com/watch?v=LsbNKO3DmF4 [36:47]

07] TKC. Birthday Celebration | **ரசிகமணி**
https://www.youtube.com/watch?v=hY_tNOEHxTU [55:19]

08] **#ரசிகமணி** **[Containing 25 Videos]**
https://www.youtube.com/hashtag/%E0%AE%B0%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%95%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF

(😊)(😊) **இரசிகமணி டி கே சி** (😊)(😊)